

# தூண்டி



ஆண்டு 1

சமூக - கலை - இலக்கிய - அறிவியல் ஏடு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பல படிகளும் ஏறாது தரமான பொருட்களை

மொத்தமாகவும், சில்லறையாகவும்

நியாய விலையில் பெற்றிட

நெல்லியடியில் நீங்கள் விஜயம் செய்ய

வேண்டிய இரு ஸ்தாபனங்கள்.

**உதயம் பலசரக்கு மாளிகை**

**&**

**நெல்லைக்குமரன் ரேடர்ஸ்**

மத்திய சந்தை,
கரவெட்டி.

நெல்லியடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''தூயவை துணிந்த போது
பழி வந்து சேர்வதில்லை''



# வயது ஒன்று

தூண்டிக்கு வயது ஒன்று. இன்று போல் இருக்கிறது. நான் தூண்டி எனும் முத்தாரத்தை தமிழுலகில் பிரசவித்து ஒரு வருஷம். ஆச்சரியம் காலச்சக்கரத்தின் வேகம் அதிதமாக உள்ளதே! ஆறு சஞ்சிகை வரவேண்டிய காலத்தில் ஒரு சஞ்சிகை வெளிவர முடியவில்லை. ஆயினும் வாசகரின் ஆதரவுக் கரங்களும் நண்பர்களின் தூண்டல்களும் என்னை மீண்டும் புத்துயிர் பெறவைத்தன. தூண்டியை துலங்கச் செய்தன. யாவர்க்கும் நன்றி. இது உங்கள் பத்திரிகை. உங்களாலே உங்களிற்காக படைக்கப்படுவது. இதில் நான் வெறும் கருவி. தூண்டி இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தமிழ் மக்களிடம் மணம் பரப்ப உங்கள் ஆதரவும் ஆசியும் தேவை.

நன்றி

—ஆசிரியர்

ஆசிரியர்
தி. செல்வமனோகரன்

இணையாசிரியர்கள்
லோ. துஷிகரன்
சோ. ரவீந்திரன்

துணையாசிரியர்கள்
க. முரளிதரன்
சௌ. சசிக்குமாரசர்மா

பங்குனி சித்திரை தூண்டல் 5 விலை 20/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியூர்க் காதலிக்கு!

பாடென்றாய்; பாடப்பதிகம் சரியில்லை
ஆடென்றாய்.
ஆட அருவருத்தாய்.
என்பாட்டன்
பூண்டிருந்த வேட்டி புனைந்து வந்தேன். ''சீ என்ன
கோல''மென நக்கல்
குலுங்கச் சிரிப்பெறிந்தாய்.
திருவிழாக்கள் பாரென்றேன்......
'தெருக்கூத்து' என்றாய் பின்.
குருகுலத்தில் கற்ற குளிர்த்தமிழில் கதை சொன்னேன்......
''பிச்சை வேண்டாம் நாயைப் பிடி''யென்றாய்.
என்நெஞ்ச
இச்சைகளைச் சொல்லி இறுதியிலே...... என்வாழ்வு
இப்படித்தான் என்றேன்!
எனையுனக்குத் தேவையெனி ''லென்
சொற்படி நட''வென்று தூண்டிலிட்டு உண்மேன்மை
வாழ்க்கையினைக் காட்டி
வலையிலெனை வீழ்த்த உள்ளாய்!

உந்தன் உறவு ஒன்றுக்காய்
இத்தனையும்
கொன்றுவிட்டு வந்து குடைபிடிப்பேன் என்றாடி
நீ நினைத்தாய்?
கேள்;
நீதான் ஏமாறப் போகின்றாய்.

கவிஞர். த. ஜெயசீலன்

கணவன்:– இதுக்குத்தான் அப்பவே சொன்னன்
'கம்பஸ்' மாப்பிள வேண்டமெண்டு
கேட்டியே!
மனைவி:– ஏன்...? இப்ப என்னவாம்?
கணவன்:– தனக்கு அறிமுகமில்லாத பெண்ணாய்
இருக்கிறதால.. ராகிங் பண்ணிப்
போட்டுத்தான் தாலி கட்டுவாராம்!
—குமுதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சாமிர்தம் 4

சிட்னிசிமித் என்பவரும் 'லோட்டட்லி' என்பவரும் ஞாபக மறதிக்குப் புகழ் பெற்றவர்கள். சிட்னி சிமித்தை லோட்டட்லி ஒரு நாள் சந்தித்த போது ''தாங்கள் நாளை விருந்துக்கு என் வீட்டுக்கு வரவேண்டும். அப்பொழுது உங்களுக்கு சிட்னிசிமித்தை அறிமுகம் செய்து வைக்கின்றேன்'' என்றார். மிகவும் மகிழ்ச்சி. ஆனால் நாளைக்கு வரமுடியாது. சிட்னிசிமித்தை நான் வேறொரு இடத்தில் சந்திக்க ஏற்பாடாகியிருக்கிறது என்றார். சிட்னிசிமித்.

★ ★ ★

எதற்கெடுத்தாலும் வேலை நிறுத்தம் அதனால் குறிக்கப்பட்ட வேலை ஸ்தம்பிதமடைந்து விடுகிறது. ஆனால் இத்தாலியில் நடந்த வேலை நிறுத்தமோ புதுமையானது. நிர்வாகத்திற்கும் சப்பாத்துத் தொழில் செய்யும் தொழிலாளர்களுக்குமிடையில் தகராறு ஏற்பட்டது. தொழிலாளர்கள் புதுமாதிரியாகத் தங்கள் எதிர்ப்பைக் காட்டிப் போராடினார்கள்.

எல்லாத் தொழிலாளர்களையும் போல் வேலை நிறுத்தம் என்ற ஆயுதத்தை அவர்கள் கையாளவில்லை. அவர்கள் வேலை செய்தார்கள். எப்படி? இடது காலுக்குரிய சப்பாத்துக்களை மட்டும் செய்து குவித்தார்கள். நிர்வாகம் பணிந்தது அவர்கள் கோரிக்கை நிறைவேறியது.

★ ★ ★

'என் மனதில் தோன்றினால் நான் ஷேக்ஸ்பியரைப் போல் எழுதுவேன்'' என்றார் வேர்ட்ஸ்வேத் என்பவர் சார்லஸ் லாம் என்ற எழுத்தாளரிடம்.

சார்லஸ் லாம் மிகவும் அமைதியாகப் பதில் சொன்னார். ''ஆமாம், ஆமாம் மனதில் தோன்றுவதில் தான் இடைஞ்சல் எல்லாம். இல்லையா?''

★ ★ ★

அமெரிக்க செனட்டர் டிக்சனை ஒரு பெண் சந்தித்தார். ''என்னை உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா என்று அவள் கேட்டாள். செனட்டர் அதற்குச் சாமர்த்தியமாகப் பதிலளித்தார்.

''உன்னைப் போல ஒரு அழகியை ஞாபகத்தில் வைத்துக் கொண்டேயிருந்தால் என் வேலை எல்லாம் கெட்டுப்போய் விடுமல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டமேசை மாநாட்டுக்கு லண்டனுக்குச் சென்றிருந்தார் காந்திஜி அப்போது ஒரு ஓவியர் அவரது உருவத்தைத் தனிமையில் வரைந்து கொண்டிருந்தார். பின்னர் காந்திஜியிடம் சென்று ''இந்திய சுதந்திரத்திற்காக நீங்கள் இப்படி எத்தனை காலம் போராடப் போகிறீர்கள்'' என்று ஒரு கேள்வி கேட்டார். காந்திஜி ஓவியரின் கையிலிருந்த பேனாவை வாங்கி அரை குறையாக வரையப்பட்ட தனது படத்தின் நாடியிலிருந்து தாடி போல சில கோடுகளை வரைந்து கொண்டே ''இத்தனை காலம்.! என்றாரே பார்க்கலாம்.

★ ★ ★

கல்லும் கவிபாடும் என்பார்கள். உண்மையிலேயே கல் கவி பாடத்தான் செய்கிறது. ருசியாவில் தெற்கு கசாக்டனி பாலை வனத்தில் ஒரு மலை இருக்கிறது. காற்று அடிக்கும் போதெல்லாம் இந்த மலையிலிருந்து இனிய நாதம் கிளம்புகின்றது.

இந்த மலையின் மேல் பகுதி இங்கு மங்கும் அசையக் கூடியதாக அமைந்துள்ளது. அப்படி ஆடும் போதெல்லாம் ஒலி கேட்கிறது. அந்த இனிய ஒலியைக் கேட்கவும் அதிசயமான அந்த மலையைக் காணவும் ரஷ்யர்கள் கூட்டம் கூட்டமாக வந்து போகிறார்கள்! இயற்கையின் வித்தை தான். என்னே!

★ ★ ★

புத்தொளி

# நினைவுகள்.........!

ஆழப்பதிந்துவிட்ட
ஆத்மார்த்த நினைவுகள்.
இந்த சஞ்சாரமே
மௌனமாகும் வேளை,
மெல்ல முகங்காட்டும்.
நட்பின் அலைகள்...... மீண்டும்
மீண்டு வரும் போது
நெஞ்சம் தத்தளிக்கும்.
பிரிவின் எல்லைகள்,.....

வேதனையின் விம்மல்கள்......
இழப்பின் துயரங்கள் ...
இன்னும் நினைவுகளானால்
மீள்வது எப்படி?
ஆத்மார்த்த நினைவுதான்
என்றாலும்;
சில நேரங்களில்
மறக்கத்தான் வேண்டும்!

எஸ். குணேஸ்

● நேற்று நம்முடையதல்ல அதை நாம் திரும்பப் பெறமுடியாது. நாளை நம்முடையதே அதனை, வெற்றி கொள்ளவோ இழக்கவோ முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவியல்

★ கியூபா நாட்டின் தலைநகரில் "6500" இருக்கைகள் கொண்ட திரையரங்கம் உள்ளது. இதுவே உலகின் மிகப்பெரிய திரையரங்கம். திரையரங்கே இல்லாத நாடு பூட்டான்.

★ பறவைகள் எல்லாம் பறக்கும் முன்னோக்கிப் பறப்பதே வழக்கம். ஆனால் ரீங்காரச்சிட்டு (Humming bird) என்னுஞ் சிறு குருவி ஆபத்துக்காலங்களில் பின்னோக்கிக் கூடப்பறக்கும்.

★ மொசாம்பிக்நாட்டின் தேசியக்கொடிச்சின்னம் A.K.47 ஆகும். A.K.47 என்பது கூடக்காரணப் பெயர்தான். A என்பது ஓட்டோமெற்றிக் (Automatic) என்பதனையும், K என்பது இதனை வடிவமைத்த கலாஷ்நிக்கோவ் என்பவரையும், 47 என்பது இது பிரசவித்த ஆண்டினையும் (1947) குறிக்கிறது.

★ சமாதானத்தின் சின்னமாக புறாவை அமைத்தவர் பபிலோபிக்காஸோ.

★ அமெரிக்காவின் கரோலைனா என்ற மாகாணத்தில் வினஸ் ஃப்ளைட்ராப் என்னும் மலர்ச்செடி உண்டு. இதன் பூக்களில் பூச்சிகள் ஏதாவது வந்தமர்ந்தால், பட்டென்று இதழ்களை மூடிக்கொள்ளும். பின்னர் வந்த விருந்தாளியின் ஆத்மா சாந்தியடைந்துவிடும். உணவு ஜீரணமான பின் மீண்டும் இதழ்களை விரித்துக்காத்திருக்கும்.

★ இந்தியாவிலுள்ள தஞ்சாவூர் சரஸ்வதி மஹாலில் ஓர் அபூர்வ நூல் உள்ளது. இதில் 100 சுலோகங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இதனை இடமிருந்து வலமாக வாசித்தால் இராமாயணம். வலமிருந்து இடமாக வாசித்தால் பாகவதம். இப்படி அர்த்தம் வருமாறு எழுதப்பட்டிருக்கின்றது.

சு. முரளிதரன்

## கொத்து

தூண்டி பற்றிய உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்புங்கள். ஏனெனில் அவை தான் தூண்டியின் தரத்தை உயர்த்தும் தூண்டு கோல்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனத்து நினைவுகள் 4

தெற்காசியப் பெண்கள் முன்னின்று நடத்திய அமைதிக்கான ஊர்வலத்தில் நாங்களும் பங்கு கொண்டோம். சாதாரண பெண்களின் அணிகளுக்குப் பின்னால், ஊனமுற்ற பெண்கள் தங்கள் தள்ளுவண்டிகளில் அமர்ந்தவாறே ஊர்வலத்தில் இணைந்து கொண்டார்கள். ''எங்கள் சுயத்துடன் நாங்கள் போராடுகிறோம்'' என்று அவர்கள் காவி வந்த பதாகை மனதை மிகவும் தொடுவதாக அமைந்தது. எமது நாட்டில் இருந்தும் ஒரு சிங்களப் பெண்மணி தனது தள்ளுவண்டியுடன் மகா நாட்டிற்கு வந்திருந்தார்.

ஊர்வலத்தில் நடந்து முடியப் பசி எடுத்தது. வழக்கமாக மதிய உணவு எடுக்கும் வட்டத்திற்கு வந்தோம். திறந்த வெளியில் நடப்பட்டிருந்த பெரியகுடைகளுக்குக் கீழ் அமர்ந்தோம். பல பெண்கள் உணவு அருந்திக்கொண்டிருந்தார்கள். மேலும் பலர் அந்த வட்டத்தை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். இன்னும் பலர் உணவு முடிந்து எழுந்து போய்க் கொண்டிருந்தார்கள். எமது குடைக்குப் பக்கத்தில் இருந்த குடையில் அமர்ந்திருந்த இரண்டு அமெரிக்கப் பெண்கள் வெறி வந்தவர்கள் போல் திடீரென்று எழுந்தார்கள். அந்த வட்டத்தின் பல்வேறு மேசைகளில் விடப்பட்டிருந்த மதிய உணவுப் பெட்டிகள், பேப்பர்கள் ஆகியவற்றைத் துப்பரவாக்கத் தொடங்கினார்கள்.

''நீங்கள் துப்பரவாக்கல் பணிக்காக அமர்த்தப்பட்ட சீனப் பெண்கள் இல்லை என்று நினைக்கிறேன்'' என்று நான் கேட்டேன்.

''இல்லைத்தான். ஆனால் இப்படிக் குப்பை இருப்பது எமக்குப் பிடிக்கவில்லை'' என்று சொல்லிக் கொண்டே ஓடி ஓடிப் பொறுக்கினார்கள்.

''உங்கள் நாட்டிலாயின் ஒருவரும் இப்படி எச்ச சொச்சங்களை விட்டுச் செல்ல மாட்டார்கள். இல்லையா?'' என்று அன்னலட்சுமி இராஜதுரை கேட்டார்.

''உண்மைதான்'' என்று சொல்லிச் சிரித்துக் கொண்டு ஒரு சில நிமிடங்களில் அவர்கள் அந்த வட்டத்தைத் துப்பரவாக்கி விட்டார்கள். யாரையும் குறை சொல்லாமல் தாமே செய்ய வேண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யதைச் செய்ய வேண்டிய நேரத்தில் செய்து முடித்த அந்தப் பண்பு என்னை மிகவும் கவர்ந்தது. மதிய உணவை முடித்துக் கொண்டு வெளியேறுகையில் நடைபாதையின் கிழக்குப்புறம் அமைக்கப்பட்டிருந்த மிகப் பிரமாண்டமான ''கும்பா அரங்கை'' நின்று நிதானித்துப் பார்க்க முடிந்தது.

மேடையின் நீளமே சுமார் எழுபத்தைந்து அடி இருக்கலாம். அதைவிடச் சற்றுக்குறைவான அகலம். அரங்கின் முன் புறத்தின் மேலே கடும்பச்சை நிறத்தில் பொன்னிற வேலைப்பாட்டுடன் கூடிய மிக அழகான சிறு திரை தொங்கிக் கொண்டிருந்தது. பகல் நேரத்தில் அரங்கின் முன்பக்கத்தைப் பச்சை முன் திரை மூடியிருக்கும். திரைக்கு மேலே சிவப்பும், வெள்ளையும் சேர்ந்த றெஜிஃபோம் அலங்காரமும், அதற்கு மேலே பச்சையும், மஞ்சளும் கலந்த கனவுருக்களும் கண்ணைக் கவர்ந்தன. திரைக்கு முன்னே சிவப்பு நிறத்தில் எட்டுப் பெரிய பந்துகள் தொங்கவிடப்பட்டிருந்தன. அரங்கின் இரண்டு பக்கங்களிலும் நாலு நிரையில் விளக்குகள் இருந்தன. ஒவ்வொரு நிரையிலும் பன்னிரண்டு விளக்குகள். தேவையான போது இந்த விளக்குகள் அனைத்தும் எரியும். தேவைக்கு ஏற்றபடி சில விளக்குகள் அணைக்கப்படும். அரங்குக்கு [ஏறுவதற்கு ஆறு உயரமான படிகள்! ஒவ்வொரு பக்கத்திலும் பத்து ஒலிபெருக்கிப் பெட்டிகள்! இந்த மேடைக்கு முன்னால் சுமார் ஐயாயிரம் பேர் அமர்ந்து பார்க்கக் கூடிய இருக்கைகள்!

நாங்கள் இந்த அரங்கின் பிரமாண்டத் தன்மை பற்றி வியந்து கொண்டிருந்த போது, எங்களைக் கடந்து சென்ற ஒரு இந்தோனேசியப் பெண்மணி, ''நாடகங்கள் நடைபெறாத நேரத்தில் எதை ரசிக்கிறீர்கள்?'' என்று கேட்டுச் சிரித்தார். சிரிக்கும் போது தான் பார்த்தேன். உதட்டுக்குக் கடும் ஊதா நிறத்தில் உதட்டுச் சாயம் பூசியிருந்தார். லுங்கி உடுத்து, முழுக்கை பிளவுஸ் அணிந்து, வலது பக்கம் மடித்த சால்வை போல் போட்டு அழகாகத்தான் இருந்தார்.

இந்த நேரத்தில் அவ்விடத்திற்கு வந்த ஆபிரிக்கப் பெண் ஒருவர் தான் வைத்திருந்த மோதிரம் ஒன்றைக் காட்டி, ''இதைப் புத்த கோயிலில் வாங்கினேன். இது உண்மையில் தங்கம்தானா?'' என்று கேட்டார். சிப்பி, சோகிகள் எல்லாம் கண்டபடி கோர்க்கப் பட்ட பல மாலைகள் அணிந்திருந்த அவர் காட்டிய மோதிரம் 'கவரிங்' என்றே எமக்குத் தோன்றியது. நாங்கள் அணிந்திருந்த பவுண் மோதிரம், சங்கிலி ஆகியவற்றைக் காட்டினோம். ''அப்படியானால் இது பவுண் இல்லையா?'' என்று அவர் கேட்டது பரிதாப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரமாக இருந்தது. சேலைக்கரை ஒன்றுக்குமேல் ஒன்று பல மட்டங்களில் வரும்படி உடுத்து, மேலே இறுக்கமான பிளவுஸ் போட்ட நேபாளப் பெண் ஒருவருடன் இப்போது மரபு வழி நடனங்கள் நாடகங்கள் நடந்து கொண்டிருந்த ஒரு சிறுகுடிசை அரங்குக்குச் சென்றோம்.

அழகிய வட்டமான குடிசை! கூரையும் வட்டம். நிலத்தில் குஷன் பொருத்தப்பட்ட பாய் விரிக்கப்பட்டிருந்தது. ஒன்றிரண்டு வர்ணம் பூசப்பட்ட மரக்குற்றிகளும் இருந்தன. நாங்கள் உள்ளே நுழையும் போது இருபத்தொன்பது பார்வையாளர் மட்டும் நிலத்தில் அமர்ந்திருந்தனர். எங்களுடன் சேர்ந்தாலும் முப்பத்திரண்டு குடிசையின் உட்புறச் சுவர்களில் சுற்றி வர அழகான ஓவியங்கள் மாட்டப்பட்டிருந்தன.

ஒரு பெண் கையில் விசிறி வைத்து நடனம் ஆடிக்கொண்டிருந்தார். எமது பரதத்துடன் அதற்குப் பல ஒற்றுமைகள் இருந்தது போல் காணப்பட்டாலும், அதன் அசைவுகள் மிக மெதுவானதாக இருந்தன. ஒரு பின்னணி வாத்திய இசைக்கு அவ்வளவு ஆறுதலாக ஆடுவதே அதில் உள்ள சிக்கல் என்று தோன்றியது.

## கோகிலா மகேந்திரன்

முன்னர் நாங்கள் பார்த்த 'கும்பா அரங்கிற்கு' முற்றிலும் எதிரான அமைப்புக் கொண்ட மிகச் சிறிய எளிமையான அரங்கு இது! குடிசையின் ஒரு மூலையில் ஒரு சிறு கதவு தெரிந்தது அதுவே ஒப்பனை செய்யும் இடமாக இருக்கும் என்று தோன்றியது. மற்றொரு மூலையில் மூன்று பதிவான மேசைகள் வைத்து அதில் மிக அழகானதொரு பூச்சாடி வைக்கப்பட்டிருந்தது. மற்றொரு மூலையில் வைக்கப்பட்டிருந்த பதிவான மேசைகளில் அழகான கோலங்கள் இடப்பட்டிருந்தன. ''ஜப்பானிய நாட்டில் ஆடப்பட்ட நடனங்களில் மிகப் பழமை வாய்ந்த நடனம் இது'' என்று சொன்னார்கள். நடனம் முடியும் நேரத்தில் இந்தப் பெண் தனது விசிறியைச் சுருக்கிக் கொண்டார்.

(தொடரும்)

## தேவஸ்வரம்
(சங்கீர்த்தனம்)

பொங்கிடும் அலைகடல் பதினில் — மன்மத
அங்கம் பைந்தலை நாகத்தில் — சயனித்தருள் உறவாட
சங்கொடு சக்கரம் நாற்கையுடனே காட்சிதரு நாராயணனே
மங்கள மருள்வாய் நானிலம் போற்றிட!

—இராம ஜெயபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லிங்கன் கிறீம் ஹவுஸ்

119, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட

ஸ்பெஷல் ஐஸ்கிறீம்

சொக்லெட் ஐஸ்கிறீம்

★ நட்ஸ் ஐஸ்கிறீம் ★ புரூட்சலட் ஐஸ்கிறீம்

★ ஜெலி ஐஸ்கிறீம் ★ வெனிலா ஐஸ்கிறீம்

★ மட்டன் றோல், ★ பட்டர்கேக் வகைகள்,

★ மிக்ஸர் ★ லட்டு ★ மஸ்கட்

அங்கர் பட்டர் ❁ ஸ்பெஷல் பீடா

---

# LINGAN CREAM HOUSE

*119, KASTHURIAR ROAD, JAFFNA.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகிற்கு அழகு செய்யும் அழகிய தங்கப் பவுண்
நகைகளுக்கு

# நதியா ஜுவல்லறி

( ஸ்ரான்லி வீதிச்சந்தி )
2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# இராசா டீசல் என்ஜினியர்ஸ்

எல்லா வகை டீசல் பம்புகளும், இன்ஜெக்ரர்களும்
திருத்துவதும், சேவிஸ் செய்வதும் உதிரிப்பாகங்களையும்
விநியோகம் செய்பவர்கள்

180, பருத்தித்துறை வீதி,
குருநாதர் கோவிலடி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:- 22779

அழகான தரமான அச்சு வேலைகளுக்கு

# தமிழ்ப்பூங்கா அச்சகம் புத்தகசாலை

பிரதான வீதி, நெல்லியடி கரவெட்டி.

மீண்டும் யாழ் நகரில

கடை பிற்றிங்குகள் செய்வதற்கு தேவைப்படும்
அலுமினியப் பொருட்கள், பீடிங்குகள், கண்ணாடிகள்
சோகேஸ், பிளைவூட், போமிக்காசீற் மற்றும் ரிவேட்

# ஜெஸீமா பிக்சர் பலஸ்

222, கே. கே. எஸ் றோட். யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காளமேகம் கண்ட காலகாலர்

-சொக்கன்-

இம் மென்னு முன்னே
எழுநூறும் எண்ணூறும்
அம்மென்றால் ஆயிரம் பாட்
டாகாவோ – சும்மா
இருந்தால் இருப்பேன் எழுந்தேனே ஆயிற்
பெருங்காளமேகம் பிளாய்

என்று தமது பாட்டுத்திறத்தினைப் பெருமிதத்தோடு வெளிப்படுத்தி, அதிமதுரகவி முதலாம் பாவலரை வாயடக்கி வைத்த காளமேகப் புலவர், திருக்குடந்தை என்னும் கும்பகோணத்திலே பிறந்து. ஸ்ரீரங்கக் கோயிலின் மடைப்பள்ளிப் பரிசாரகராய்க் கல்வியறிவு சற்றேனும் பெறாதிருந்து, அகிலாண்ட நாயகியான அம்மை உமிழ்ந்த தாம்பூலத்தை அருந்தியதால் ஆற்றல் மிக்க பெரும் பாவாணர் ஆனார் என்பது 'விநோதரச மஞ்சரி' என்னும் நூல் வாயிலாய் அறியவரும் செய்தி.

அஷ்டாவதானம் வீராசாமி செட்டியார் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலே எழுதி வெளியிட்ட நூல் 'விநோதரச மஞ்சரி' தலைப்பிற்கேற்பத் தமிழ்ப்புலவர் பலர் பற்றிய விநோதமான செய்திகளை இரசனையோடு எடுத்துரைத்த கட்டுரைகள் இந்நூலில் அமைந்திருத்தல் காணலாம். புலவர்களின் வரலாறுகளோடு 'தெய்வக் கொள்கை', 'கற்பு நிலைமை', 'நன்றி மறவாண்மை' 'சிறுகூனன் கதை', அவிவேக பூரணகுரு கதை', ஒரு பதிவிரதை சரித்திரம்', 'கற்றாய்ந் தொழுகல்', 'காலபேத வியல்பு' முதலாம் பொதுத்தலைப்புக்களில் அமைந்த பல்சுவைக் கட்டுரைகளும் 'விநோதரச மஞ்சரி'யில் இடம் பெற்றுள்ளன. பல்வேறு மலர்கள் கொண்டு கட்டப்படும் மாலை 'மஞ்சரி' என வழங்கும். பலவிதக் கட்டுரை மலர்களால் தொடுக்கப்பட்ட காரணத்தால் இதற்கு மஞ்சரி என ஆசிரியர் பெயரிட்டார்.

காளமேகப்புலவர் சரித்திரம் (வி. ர ம. 307–365) விநோதரச மஞ்சரியிலே மிக விரிவாகத்தரப்பட்டுள்ளது. மடைப்பள்ளிப் பரிசாரகருக்கு மாண்புமிகு கவித்திறத்தினை, மாதேவி வழங்கிய குளியமை பற்றிக் கூறப்படுவது இது:

"......... அம்மை அவனுக்கு அதுமுதற் காளமேகமானது அமோகமாய் மழைபொழிவது போலத் தமிழில் ஆசு முதலாகச் சொல்லப்படும் நால் வகைக் கவிகளும் அசுவதாட்டியாய்ப் பாடும் சக்தி உண்டாகவும் அந்நாற்கவிகளிலும் யாராயினும்ஒருவர்எந்தச்சொல்லாவது பொருளாவது அடியாவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடையாவது எடுத்துக் கொடுத்து, 'இன்ன அலங்காரத்தில் இப்படித் தொடங்கி இப்படி முடிக்கவேண்டும்' என்ற மாத்திரத்தில் மயங்கி இடர்ப்படாமல் அப்படியே விரைந்து பாடுகின்ற ஆசுகவித்திறம் விசேஷமாகச் சிந்திக்கவும் அக்காரணத்தாற் காளமேகக் கவி, என்னும் பெயர் வாய்க்கவும் அனுக்கிரகித்து மறைந்து போனாள்''.

அசுவதாட்டி – குதிரையின் (வி. ர. ம. 309) விரைவு

அம்மையின் அருள்பெற்றுக் காளமேகப் புலவர் வரகவி ஆனாரா என்பது, எமது ஆய்விற்கு அப்பாற்பட்டது. ஆனால் அவர் பெயரால் வழங்கும் தனிப் பாடல்களின் வாயிலாக அவரின் கற்பனையாற்றல், சொல்லாட்சி, சிலேடைத்திறம், நகைச்சுவை, பழிப்பதுபோலப் புகழும் பாங்கு, (நிந்தாஸ்துதி) நுண்மதி என்பன மிகத் தெளிவாகப் புலனாகின்றன. சிவபெருமான், உமாதேவி, திருமால், விநாயகர், முருகன், முதலாம் கடவுளர் மீது நிந்தாஸ்துதியாய் அவர் பாடியுள்ள பாடல்கள் மிகவும் சுவை பயப்பன. அவற்றுள் சிவபெருமானாகிய காலகாலர் மீது பாடிய சில பாடல்களை அறிமுகம் செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தில்லைச் சிவனார் சிரிப்பிற்கு உள்ளாகிறார்!**

ஒருமுறை காளமேகப் புலவர் தரிசிக்க முத்தி தரும் சிதாகாசமாகிய சிதம்பரத்திற்குச் சென்றார்; அங்கு ஆடல் புரிந்திடும் அம்பலவாணரைத் தரிசித்தார். பழிப்பது போலப் பரவிடும் அவரின் இயல்பான கவித்திறம் அந்தப் பதியிலே ஊற்றெடுத்துப் பாய்வதனைப் பின்வரும் பாடல்கள் கொண்டு அறிந்திடலாம்.

''தில்லை நாதரே! நச்சுப் பாம்பினைத் தரித்த நாயகரே! நீர் புறப்படுவதோ பிச்சை எடுப்பதற்கு! அவ்வாறிருக்க, சூலமும், யானையும் (யானைத் தோலும்) கரியகடல் போல முழங்கும் மேளமும் ஆகிய அரச ஆடம்பரங்களெல்லாம் உமக்கு ஏன்? (பிச்சைக் காரனுக்கு ஏது கொட்டு முழக்கு?'' என்ற பழமொழியினை அறியீரோ?'')

நச்சரவம் பூண்டதில்லை
நாதரே! தேவரீர்
பிச்சை எடுத்துண்ணப்புறப்பட்டு
—உச்சிதமாம
காளமேன்? குஞ்சரமேன்? கார்க்
கடல் போலேமுழங்கும்
மேளமேன்? ராசாங்கம் ஏன்?

''ஐயா! நீர் ஏழையாய் இருப்பதால் உமக்கு எவ்வாறெல்லாம் இடையூறும், பழிப்பும் செய்கிறார்கள். உம்மைத் தாண்டிக்கொண்டு ஒருத்தி தலையின் மேல் ஏறி இருக்கிறாள். மற்றொருவனோ செருப்பால் உமது தலையிலே போடுகிறான். இன்னொருவனோ உம்மை ஏசுகிறான் வேறொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனோ தனது வில்லை முறியும் வண்ணம் உமது மண்டையிலே அடிக்கிறான். (ஐயோ! பாவம்!)

தாண்டி ஒருத்தி
தலையின் மேல்
ஏறானோ?
பூண்ட செருப்பால்
ஒருவன் போடானோ?-
மீண்டொருவன்
வையானோ? வில்முறிய
மாட்டானோ? தென்புலியூர்
ஐயா நீ ஏழை யானால்.

கங்கை தலைமேல் இருப்பதும், கண்ணப்பர் செருப்பால் தலைமீது (காளத்தியப்பர் மீது) மிதித்ததும், சுந்தரமூர்த்தி நாயனார் 'பித்தா' என்று ஏசியதும், அருச்சுனன் (வேடராய் வந்தவர்மீது) வில்லால் அடித்ததுமாகிய புகழ்ச் செயல்கள் இங்குப் பழிப்பது போல எடுத்துரைக்கப்படும் திறம் நயம் மிக்கதாகும்.

'இடம் கண்டால் மடம் பிடுங்குதல்' என்பது ஒரு பழமொழி. சிவபெருமானும் இளைத்தவன் மீது எகிறிப்பாய்பவர் தாம்!

வலியார்முன் தன்னை
நினைக்கத் தான்தன்னின்
மெலியார்மேற் செல்லும்
இடத்து.

(திருக்குறள் – துறவறவியல் 250)

என்ற பொய்யாமொழியை அப்பெருமான் உணரார்போலும்! இல்லாவிட்டால் கல்லால் எறிந்தவரையும் வில்லாலும் செருப்பாலும் பிரம்பாலும் அடித்தவரையும், 'இவர்கள் யாவரும் நல்லவர்களே' என்று இரங்கி அருள் செய்த அவர், கேவலம் பூவைப்பாணமாய்த் தொடுத்தவனை மட்டும் கொன்றொழிப்பாரா? நன்மை செய்தாருக்குத் தீமையும் தீமை செய்தாருக்கு நன்மையும் அருளுவதா நல்ல பண்பு? இடி முழங்கி மழை பொழியும் வளம் மிகுந்த பூஞ்சோலை சூழ்ந்திருக்கும் புலியூரின் அம்பலவாண தேவரே! சொல்லும் ஐயா!"

செல்லாரும் பொழில்சூழும்
புலியூரம்
பலவாண தேவ னாரே
கல்லாலும் வில்லாலும்
செருப்பாலும்
பிரம்பாலும் கடிந்து சாடும்
எல்லாரும் நல்லவரென்
றிரங்கியருள்
ஈந்ததென்ன? இகழ்ச்சி
ஒன்றும்
சொல்லாமல் மலரைக்கொண்
டெறிந்தவனைக்
கொன்றதென்ன சொல்லு
வீரே

கல்லால் எறிவதனையே வழிபாடாகக் கொண்டவர் பௌத்த சமயியான சாக்கிய நாயனார். ('அப்பாரும் அடிசார்ந்தார்' சாக்கியர் என்பது திருத்தொண்டர் தொகை) வில்லால் அடித்தவன் அருச்சுனன் செருப்பால் தலையிற் பதித்தவர் கண்ணப்பர் பிரம்பால் அடித்தவன் அரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மர்த்தன பாண்டியன். (வைகைக்கு அணைகட்டாது துயின்ற கூலியாளை (சிவபெருமானை)ப் பிரம்பால் அடித்தான்) இவர்கள் யாவரும் பத்தி வழி நின்ற பழவடியார்கள். மன்மதனோ தேவரின் ஏவலால் சிவபெருமானின் யோகத்தினைக் குழப்பி அவரைக் காமம் கொள்ள வைக்கத் தனது மலரம்பினால் முயன்றவன். இவனுக்காக இரங்குவதுபோலவும், முன் கூறியவர்களின் செயலைக் கண்டிப்பது போலவும் பாவனை செய்து துதி பாடுகின்றார் காளமேகக்கவிஞர்.

ஆட்டுக்கோனை மணந்த சிற்றிடைச்சி!

''அவளோ மாட்டுக்காரனாகிய இடையனின் தங்கை; சிற்றிடைச்சி! மதுரையிற் பிறந்தவள். ஆனால் அவள் யாரை மணந்து கொண்டாள்? ஆட்டுக்காரனாகிய தில்லை வனத்தவனை! நீ இது பற்றிக் கேட்டிருக்கவில்லையா? இந்தக் கலியாணத்தின் பயனாய் அந்தப் பெண் ஆட்டுக்குட்டியை மறித்துப் பிடிக்க; ஒரு கொம்பன் யானையை அல்லவா பெற்றெடுத்தாள் (இதை விட அதிசயம் வேறு என்ன?)''

மாட்டுக்கோன் தங்கைமதுரை
விட்டுத் தில்லைவனத்
தாட்டுக்கோ னுக்குப் பெண்
டாயினாள்—கேட்டிலையோ
குட்டிமறிக்கவொரு கோட்டா
னையும் பெற்றார்
கட்டுமணிச்சிற்றிடைச்சி தான்

இப்பாடலிலே மாட்டுக்கோன் (கோன்—அரசன்) என்றது மதுரா புரிக்கு மன்னனான கண்ணபிரானை அவனின் தங்கையே சிறிய இடை உடையவளான உமாதேவி. ஆட்டுக்கோன் என்பது ஆடல் அரசனான நடராசனை கோட்டானை விநாயகரைக் குறிக்கும். (கோடு—கொம்பு, ஆனை—ஆனை முகத்தர்) குட்டி மறித்தலாவது தலையிற் குட்டி, காதை இரு கைகளாலும் மாறிப் பிடித்தல். (தோப்புக்கரணம் போடுதல் !)

பல்லிளித்த பரமன்

திருக்கழுக்குன்றத்தில் வீற்றிருந்து அருள்பவர் வேதகிரீசர். அவரைத் தரிசித்த வேளையிலே காளமேகப் புலவரின் உள்ளத்திலே ஒரு கற்பனை பிறந்தது. இந்தக் கற்பனைக்கு மூலம், சிவபெருமான் திரிபுரம் எரித்த திருவிளையாடல்.

மாமேருமலையை வில்லாக வளைத்து, வாசுகியை நாணாக்கி, மண்தின்ற மாலவனைப் பாணமாக்கி, வேதம் நாலும் குதிரைகளாக, பிரபஞ்சமாகிய தேரிலே, நான்முகன் சாரதியாய் அமர்ந்திருக்க முப்புரங்களையும் அவற்றின் தலைவர்களான தாரகாக்கன், விமலாக்கன், வித்யுன்மாலி ஆகிய அரக்கர்களையும் அழித்தொழிக்கக் கைலாசபதி புறப்பட்டார். ஆனால் நடந்ததென்ன? போருக்குப் பதில் சிவனாரின் சிரிப்பு, பயன் முப்புர எரிப்பு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெங்கடேஸ்வரா

## VENKADESWARA

சைக்கிள், சைக்கிள் உதிரிப்பாக விற்பனையாளர்

79, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்



# சிறி மாதவன்

## SRI MATHAVAN

சைக்கிள், சைக்கிள் உதிரிப்பாகம், வானொலி, கைக்கடிகாரங்கள் சுவர்க் கடிகாரங்கள், பிலிம் றோல் மற்றும் பல்பொருள் விற்பனையாளர்கள்.

97 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகூர்த்தப் பட்டுப்
பிடவைகளுக்கு
பெயர் பெற்ற
ஸ்தாபனம்

# ராசி சில்க்ஸ்

70, நவீன சந்தை (உட்புறம்) யாழ்ப்பாணம்.

# RASI SILKS

70, NEW MARKET, (Inside) JAFFNA.

யாழ் நகரில் அனைத்து
சுபமுகூர்த்தப் பட்டுப்,
பருத்திப் புடைவைக் கடல்

# சீமாட்டி

(புடைவைக் கடல்)

# Seemati

*122, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.*

*122, Power House Road, JAFFNA.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சொல்லுதற்கும் அரிய தான பெரிய கழுக் குறைத்து ஈசரே! (சொல்லுதற்கு மட்டும் பெரிய கழுக்குன்றம்' எனப் பழிப்பது போலவும் தொனிக்க வில்லையா?) தொன்று தொட்டு அவலப் பிழைப்பையே நீர் நடத்துகின்றீர்; நடத்தி வந்து விட்டீர். 'முப்புரத்தை இதோ அழிக்கிறேன்' என்று வில்லைப் பிடித்துப் போன உமக்கு எய்வ தற்குக் கூடவில்லையே! அந்த நேரத்திலே என்ன செய்தீர்? பல்லைத் திறந்து காட்டினீர். இது தான் உமது படைத் திறம்!''

திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளைக் கேலி செய்து கீழ்ப் படுத்துவது போல அவரை மேம்படுத்திப் பரவிடும் காளமே கத்தின் கவித்திறமே திறம்!

சொல்லிற் பெரிய கழுக் குன்றரே!
தொல்லை நாள் முதலா
அல்லற் பிழைப்பே பிழைத்து
விட் டீர்முப் புரத்தவரை
வில்லைப் பிடித்தெய்ய
மாட்டாமல் நீர் அந்த
வேளையிலே
பல்லைத் திறந்துவிட் டீர்இது
காணும் படைத்திறமே.

**காளமேகத்தின் வழி தனிவழி**

நிந்தாஸ்துதியினைக் காள மேகப் புலவரின் சம காலத்த வரான இரட்டையர் போன்ற பிறபுலவர்களும் கையாண் டனர். எனினும் காளமேகப் புலவர் போல அதனைப் பூரண ஆற்றலோடு தனிப்பாடல்களில் இவர்கள் கையாளவில்லை, கையாளக் கூடவில்லை என்றே கூறத் தோன்றுமளவிற்கு இப் பெரும் புலவர் அத்துறையில் ஈடுஇணையற்று விளங்குகின் றார். நகைச்சுவையோடு, எதிர் மறை உத்தியின் மூலம் சாமா னிய மக்கள், கடவுளர் பற்றிய புராண, இதிகாசச் செய்திகளை எளிதில் அறிந்து கொள்ள இவ ருடைய பாடல்கள் உதவின என்று தயங்காது கூறலாம்.

## மனம்

கண்ணுக்கு எட்டுகின்ற
எழில்களை ரசிப்பதால்த்தானே. ?
உண்மையான மனங்களை
உணரமுடியவில்லை!
தம் நெஞ்சே கல்லாய் இருப்பதால்
இளகிய நெஞ்சங்களையே
காணமுடியவில்லை......
எம் இதயங்கள்
வெந்து போனதால் தானோ....?
என்னவோ.........
மகிழ்கின்ற இதயங்கள் கூட
சில நிமிடங்களிலேயே
மடிந்து விடுகின்றன
உண்மைகள் உணரப்படாமையால்
மனக் கதவுகளின்
திறவுகோல்த் துவாரங்கள்
தென்படவே இல்லை......!

மீனா அருணாசலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளியெங்கே......
# இருட்டில்தான் !

கும்மென்ற இருட்டின் குடுமிப் பிடியில்தான்
அம்மாவைத்தேடி அலறும் சிறுபிள்ளை
என்னால் முடியாதென் றெண்ணம் சோர்கையில்தான்
அண்ணார்ந்து பார்த்து ஆண்டவனைக் கண்தேடும்

உண்மை இதுதான் உலகத்து வாழ்க்கையிலே
நன்மைதரும் ஒளியோ நடுஇருட்டில் தானுண்டு
இரு நெஞ்சம் சேருகிய இனியசுகம் காதலதும்
கருவிழியில் தானேபார் கருக்கட்டல் செய்கிறது

இருட்டு விழிதானே இதயஒளி பாய்ச்சுதடா
புரட்டி யெடுத்துப் புல்லரிக்க உன்னைவைத்து
குரல்வளைக்குள் இதயத்தை கொண்டு வந்து செல்லுதடா

ஞானநிலை ஒத்திகையில் ''நானழிய'' இதயங்கள்
மோனநிலை உணர்ந்து மூழ்கிக் கிடப்பதற்கும்
அன்புச் சுடரொளியின் அர்த்தம் புரிவதற்கும்
என்றும் இருட்டுத்தான் ஏதுவாய் அமைகிறது

உன்னைமட்டும் அல்ல உலகியல்பை எடுத்துப்பார்
ஞானச் சூரியனின் நல்வரவே கருங்கடலின்
ஊனைப் பிழந்தேதான் உதித்து எழுகிறது

இடர்கள் தொடர்ந்துவரும் இயலாமை நிலையிற்றான்
திடசித்தம் என்றிடுமோர் திவ்விய ஒளிபிறக்கும்
முடங்கித் திணறி முனகுகிற வேளையில்தான்
உடைத்துக் கிளம்புகிற உத்வேகம் நெஞ்சிலெழும்

ஆகவேதான் சொல்வேன் அழிவு மறங்கொடுமை
சோகம் கடன்வாழ்வின் சோதனைகள் யாவையிலும்
புடம்போடும் நெருப்பின் புத்தொளியைக் காண்பவனே
திடமனிதன்: அவனே தீர்க்க தரிசியுமாம்

புத்தனுக்கு ஞானஒளி புகட்டியது யார்எதுசொல்?
சத்தியமாய் மூப்புபிணிச் சாக்காட்டுத் துன்பமென்ற
பத்தியங்கள் தானேஅப் பட்டத்து இளவரசன்
சித்தார்த்த னுக்குச் சிந்தையொளி யூட்டினவாம்

உளி செய்யும் உபத்திரவம் ஒருகல்லைச் சிலையாக்கும்
ஒளியெங்கே மனிதா? உனைச்சூழ்ந்த இருட்டில்தான்

*கவிஞர் சு முகுந்தன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்து

ராஜி

அது ஒரு நீண்டு அடர்ந்த சோலைவனம். மரங்களும் செடிகளும் பூத்துக்குலுங்கிய வண்ணம் காட்சி தரும் அச்சோலையை ரசிப்போர் ஏராளம் அச்சோலையின் நடுவே மிகப்பெரிய பருத்த மாமரம் ஒன்று நின்றது அதிலே ஆழமான ஒருபொந்து அதற்குள் ஒரு கூடு, உள்ளே ஒரு சிட்டுக்குருவிக் குடும்பம்.

ஆண்சிட்டு கூட்டின் விளிம்பில் உட்கார்ந்துகொண்டு பொந்தினுள் தலையை நீட்டி தனது மனைவிச்சிட்டிடம் ''முட்டைகளும், குழந்தை சித்துவும் கவனம். நான் உணவு தேடிவருகிறேன்'' எனக் கூறிவிட்டு பறந்தது ஆண்சிட்டு கூட்டினுள் பச்சைக்குழந்தைச் சிட்டான சித்து தனது தாயைபார்த்து அம்மா எங்களைக் கொல்லக்கூடியவர்களும் இங்கு உள்ளார்களா? என்று கேட்டது. தாயும் ''ஆமாம் ஒரு கறுப்புப் பூனை உண்டு. நானும் உன்தந்தையும் முன்புவேறொரு கூட்டில் வாழ்ந்து வந்தோம். அப்பொது நீ இல்லை ஒருநாள் ஒரு பெரிய கறுப்பு பூனை எமது கூட்டில் ஏறி கூட்டையும் முட்டைகளையும் பிய்தெறிந்து விட்டது. முட்டைகளையும் உடைத்துக் குடித்துவிட்டது. நானும் அப்பாவும் தப்பித்து விட்டோம். அதன் பின் மீண்டும் அவ்விடத்தில் கூடுகட்டாமல் இச்சோலைக்கு வந்தோம்.'' என்று கூறியது. கூறும்போதே அதன் கண்களில் கண்ணீர் மின்னியது சித்துவும் ''அந்த முட்டைகள் பொரித்து இருந்தால் என்னைவிடப் பெரிய சகோதரர்கள் இருந்திருப்பார்கள் என்னம்மா'' என்று கேட்டது. தாயும் தலையசைத்தது. அப்போது ஆண்சிட்டு உணவுடன் கூட்டை அடைந்தது. தாய்சிட்டு உணவை பிய்த்துப் பிய்த்து சித்துவுக்கு ஊட்டியது திடீரென ஒரு சலசலப்பு எழுந்தது. மூன்று சிட்டுகளும் அந்த இடத்தை நோக்கின.

அந்த நீண்ட சோலையில் ஒரு புறம் பெரிய பற்றை காணப்பட்டது ஒரு ஆளை மூடுமளவுக்கு வளர்ந்திருந்த அப்புற்புதரில் சிறிய சலசலப்பு ஏற்பட்டது. பற்றைகள் ஆடின, சற்றுநேரத்தில் ஒரு புஸு புஸு வாலொன்று பற்றையினூடாக தெரிந்தது. சிட்டுக் குருவிகளுக்கு அது ஒரு பூனையின் வால் என்று உடனே புரிந்து விட்டது. முட்டைகளை குடித்த அதே பூனை, சிட்டுகளுக்கு கிலி பிடித்துக்கொண்டது. தாய்சிட்டுக்கும் தந்தைச்சிட்டுக்கும் தற்போது கூட்டிலிருக்கும் முட்டைகள்மேல் கவலையில்லை. பிறந்து மூன்று மாதம் ஆகியும் பறக்கத்தெரியாத சித்துமேல்தான் கவலை பறக்கத் தெரியாத அவன் பூனைக்கு இரையாகி விடக்கூடாதே இரண்டும் பதைபதைத்தன. ஆண்சிட்டு கீழேநோக்கியது. பூனை அடிமரத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருங்கி மேலே ஏறிக்கொண்டிருந்தது சிட்டுக்குருவி முட்டையிடும் பருவம் அதற்கு எப்படித்தான் தெரியுமோ? ஆண்சிட்டு பெண்சிட்டு 'ஜிவ்' என்று உயரப்பறந்தன. மேலே வட்டமிட்டபடியே ''சித்து பற பற'' என்று கத்தின. பூனையும் மெல்லமெல்ல ஏறியது சித்து கூட்டுக்குள்ளிருந்து அச்சத்துடன் ''கீச் கீச்'' எனறு கத்தியது., கூட்டுக்குள் இருந்து தத்தித்தத்திப் பாய்ந்தது. பூனை கூடு இருந்த கிளைக்கு ஏறி கூட்டில் கைவைத்து அதனை இழுத்தது சித்து மிகவும் பயந்து போய் கூட்டின் விளிம்பில் நின்று செட்டைகளை விரித்து பறக்க முயன்றது ''தொப்'' என்று கீழே விழுந்தது. பூனை சித்துவைக் கவனிக்காமல் முட்டைகளை உடைத்து குடித்துக்கொண்டிருந்தது.

சித்து கீழே கிடந்தபடியே பறக்கமுயன்றது தோல்விகண்டது அதனால் சிறிதளவு தூரமே பறக்க முடிந்தது. பூனை முட்டைகளை குடித்துவிட்டு சித்துவை நோக்கி மூச்சு இரைத்தபடி வந்தது அதன் அடுத்த குறி சித்துதான் சித்து தத்திப்பாய்ந்தது. பூனை அதைநெருங்க முயலமுயல தத்தியது பூனையால் அதனை நெருங்க முடியவில்லை. அதற்கு கோபம் வந்துவிட்டது. ஒரே பாய்ச்சலாக சித்துமேல் பாய்ந்தது அவ்வளவுதான், சித்து தன் அவ்வளவு பலத்தையும் பிரயோகித்து காலால் நிலத்தை உதைத்து மரத்தின் பதிந்த கிளையில் அமர்ந்து கொண்டது. தனக்கு பறக்க தெரியும் என்பஃத எண்ணி மகிழ்ந்தது. பூனை அந்தக் கிளையிலும் ஏறியது உடனே சித்து மறுகிளைக்கு தாவியது இப்படியாக ஒவ்வொரு கிளையாக தாவித்தாவி பூனையிடம் இருந்து தப்பிவிட்டது. பூனை ஓடிவிட்டது தாய்ச்சிட்டும், தந்தைசிட்டும் சிதைந்து போன தமது கூட்டையும், முட்டைகளையும் பார்த்து கண்ணீர் விட்டன. இனிமேல் தம்மால் அக்கூட்டில் வாழமுடியாது என்றெண்ணி உயரே எழுந்து பறந்தன. சித்துவும் அவற்றுக்கு பின்னே தாழ்வாக பறந்து சென்றது.

மூன்று சிட்டுக்களும் வேறொரு மரத்தில் வந்து உட்கார்ந்தன. பின்னர் அந்த மரத்திலேயே கூடு கட்ட முடிவு செய்தன. தாயும், தந்தையும் வைக்கோல், காய்ந்தபுல், தும்புகளால் கூடு கட்ட சித்து கிளைக்குக்கிளை தாவி பறக்கப் பழகலானது. சீக்கிரத்திலேயே அது நன்றாக பறக்கப்பழகி விட்டது. காலம் ஓடியது சித்து நல்ல இளைஞனாக வளர்ந்துவிட்டது. அந்த வட்டாரத்தில் வாழ்ந்த ஏனைய சிட்டுகளுக்கும் அது தலைவன் போல் விளங்கியது. சிறிது நாளில் அம்மரத்தில் வாழ்ந்த பெண்சிட்டுகள் எல்லாம் முட்டை இடத் தொடங்கின. பூனையைப்பற்றி சித்து ஏனைய சிட்டுக்களிடம் கூறி பூனையிடம் இருந்து இந்த முட்டைகளை பாதுகாக்க வேண்டும் என்றும் கூறியது. பெண்சிட்டுகளும், ஆண்சிட்டுகளுக்கும் பயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது வரத் தொடங்கியிருந்தது. அவை எல்லாமாகச் சேர்ந்து பூனையிடம் இருந்து தப்பயோசனை செய்தன. சித்துவுக்கு ஏனைய சிட்டுகள் சொன்ன யோசனைகள் பிடிக்கவில்லை. கடைசியில் தானே ஒரு யோசனை கூறிற்று. உடனே வேலைகள் ஆரம்பமாயின. பூனை என்றாவது ஒரு நாள் மோப்பம் பிடித்து அங்கு வரும் என்பது அச்சிட்டுக்களுக்கு தெரியும். அது வருமுன்னரே தாக்குதல் மேற் கொள்வதற்காக சிறந்த ஆயுதத்தை சித்துவின் யோசனைப்படி தயார் செய்து முடித்தன. மூன்று நாளில் வேலை முடிந்தது. அவ் வாயுதத்தின் உடலாக பயன்பட்டது பெரிய தேக்கு இலை!

★ மாணவனால் மாணவருக்காக ஒரு படைப்பு ★

காலம் உருண்டோட பூனையும் மோப்பம் பிடித்து வந்து விட்டது. சிட்டுகள் பயப்படுவது போன்று நடித்தன. முன்னுக்கு அடர்ந்து நின்ற மரமே முதலில் பூனையின் கண்ணுக்குள் குற்றியது. சித்து பறந்து போய் அந்த மரத்தின் கிளையில் உட்கார்ந்தது. அந்த கிளையில் அவற்றின் முக்கிய ஆயுதம் வைக்கப்பட்டிருந்தது. அப் பெரிய இலையில் ஒவ்வொரு சிட்டும் தமது சின்னஞ்சிறு அலகுகளி னால் எடுத்து நிரப்பிய மணல் நிறைந்திருந்தது. தமது சிறு அலகு களால் அவளவு மணலையும் சேர்க்கத்தான் எவ்வளவு நாளாயிற்று! முயற்சி இருந்தால் தானே முன்னேற முடியும்? பூனை அவசரப் படாமல் ''ஸ்லோமோஷனில்'' நடந்து வந்தது. வரவிருக்கும் ஆபத்து அவருக்கெங்கே தெரியும்? மரத்தடியில் வந்த பூனை ஏனைய சிட்டுகளை ஒரு கிண்டல் பார்வை பார்த்து விட்டு மரத் தில் ஏற தயாரானது மரத்தை அண்ணாந்து பார்த்த படியே அது முதல் அடிவைக்க... ... சித்து இலையிலிருந்த மணலை கவிழ்த்து கொட்டியது. பூனை கண்களிலும் மூக்கிலும், வாயிலும் மண்கொட் டுண்டு கீழே குதித்து ஓடலானது. எல்லாச் சிட்டுகளும் அதனை துரத்தித்துரத்திக் கொத்த அது கண்ணும் தெரியாமல் மண்ணும் தெரியாமல் ஓடி ஒவ்வொர் மரத்திலும் முட்டிமோதி முகமெங்கும் இரத்தம் ஒழுக ஒரு குளத்தில் விழுந்தது. சற்று நேரத்தில் பூனை அமிழ்ந்து மிதந்தது. அது இறந்து விட்டது. சிட்டுகள் மகிழ்ச்சியால் கீச்சிட்டு தமது இருப்பிடம் நோக்கி ஆனந்தமாய் பறந்தன. இனி அவற்றுக்கு ஒரு விடிவு காலம் பிறக்கும்.

● ஏடு தூக்கி பள்ளியில் இன்று பயிலும் சிறுவரே நாடு காக்கும் தலைவராய் நாளை விளங்கப்போகிறார்.

–அருச்சுனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமக்காக எல்லாம் உமக்காக ...... உமக்காக எல்லாம் உமக்காக......



## மாணவர் படைப்புக்கள்

### குயிலக்கா

குயிலே குயிலே குயிலக்கா
கொஞ்சம் என்னைப் பாரக்கா
கூவித்தொண்டை வலிக்காதோ?
கொஞ்சம் ஓய்வு கொள்ளக்கா.

பனியோ வெயிலோ ஆனாலும்
பாடிப்பாடி கூவுகிறாய்
மனதில் துன்பம் மறந்திடவே
மனிதனை கூட மயக்குகின்றாய்.

உலகே வியக்கும் குயிலக்கா
உன்னைப்பாட கவிஞருண்டோ?
நலங்களெல்லாம் பெற்றே நீ
நன்கு வாழ வாழ்த்துகிறோம்.

## உங்களுக்குத் தெரியுமா?

**விஞ்ஞானி !**

நோபெல்— இவர் சுவீடன் நாட்டைச் சேர்ந்த விஞ்ஞானி ஆவார். *(1833–1946)* இடைனமெட் எனும் வெடிமருந்தை செய்யக் கண்டு பிடித்தவர். இதனால் பெரும் பொருளீட்டியவர். விஞ்ஞானம், இலக்கியம், சமாதானம் முதலிய துறைகளில் திறமை உடையவர்களுக்கு ஆண்டு தோறும் ஐந்து பரிசுகள் வழங்கும் படி பெரும் செல்வம் விட்டுச் சென்றவர். ''நோபல் பரிசு'' என்று இவர் பெயரில் வழங்கப்படும் பரிசுகளே இவையாகும்.

**உலகில**

- ★ மிக வேகமாக ஓடக்கூடிய விலங்கு — சிறுத்தை
- ★ நாய்க்குடும்பத்தில் மிகப் பெரியது — ஓநாய்
- ★ பூனைக் குடும்பத்தில் மிகப் பெரியது — சிங்கம்
- ★ மனிதக் குரங்குகளில் பெரியது — கொரில்லா
- ★ மிகச்சிறிய பறவை — ஹங்காரப் பறவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் படைப்பு . மாணவர் படைப்பு .....மாணவர் படைப்பு......மாணவ

## செவ்வாய்க்கிரகத்தில்

பூமிக்கு அடுத்ததாக சூரியனைச் சுற்றிவரும் கோள் செவ்வாய்க்கிரகம் ஆகும். இச்செவ்வாய்க் கிரகத்திற்கு பூமியில் இருந்து சென்று திரும்புவதற்கு மூன்று வருட காலம் எடுக்குமென விஞ்ஞானிகளின் கணிப்புகள் கூறுகின்றன இதற்கு முன்னோடி நடவடிக்கையாக 1996 ம் ஆண்டு டிசெம்ப மாதம் ''பாத் பைண்டர்'' எனும் விண்வெளிக் கலம் அமெரிக்காவின் ''நாஸா'' விண்வெளி ஆராய்ச்சி மையம் அனுப்பி வைத்தது. இது 1997ம் ஆண்டு ஜுலை மாதம் 4ஆம் திகதி செவ்வாய்க்கிரகத்தில் சென்று இறங்கியது.

''பைத் பைண்டரை'' செவ்வாயில் இறங்கிய போது ''செஜோர்னர்'' என்ற நடமாடும் சிறிய ஆய்வு வண்டி ஒன்றை செவ்வாய்க் கிரகத்தின் மேல் பரப்பில் விஞ்ஞானிகள் இறக்கினார்கள். இவ் ஆய்வு வண்டி பூமிக்கு பலவிதமான படங்களை எடுத்து அனுப்பியுள்ளது.

## இராட்சத மலர்

உலகிலேயே மிகப்பெரிய மலரை சுமாத்திராவில் காணலாம். மிக அதிக மழை பெய்யும் காடுகளில் இந்த மலர் உள்ளது. ''ராஃப்ளீஷியா'' என்பது இதற்குப் பெயர் ஆகும். இதற்கு இலைகளோ தண்டோ கிடையாது. ஒரே ஒரு பெரிய பூ. இதுவே தாவரம். மூன்றடி குறுக்களவு உடையது. நன்கு வளர்ச்சி அடைந்த ''ராஃப்ளீஷியா மலரின் எடை 15 பவுண்ட் ஆகும்.

தொகுப்பு லோ. துஷி.

---

## தேவகானம்

அந்தி வந்த தென்றல் இன்று
தேவ கானம் ஒன்று
இசைக்க வந்தது – ஆனால்
அது பாட வந்த பாடலை
ரசித்து கேட்க – என்
செவிகள் இடம் தரமறுத்துவிட்டன
கானம் ஒன்று இசைக்க
ராகம் ஒன்று வேண்டுமல்லவா
ஆனால், இப்பாடலில்
ராகத்திற்கு பதில் துப்பாக்கிச்
சன்னங்களின் ஒலிகளும்
ஷெல்களின்
வெடி ஓசைகளுமே!
எப்படிக் கேட்க முடியும்
இந்தப் பாடலை – என்
மனம்அமைதியான பாடலைத்தான்
கேட்க விரும்பியது – ஆனால்
என் செவிகள் கேட்பதோ
குண்டொலிகளுடன் கூடிய
தேவ கானங்களை!

சந்திரகலா - மகேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிமாணவிதியும் இறை நம்பிக்கையும்

அண்மையில் கிடைத்த விஞ்ஞான முடிபுகளின் படி பரிமாணக் கொள்கை (கூர்ப்புக்) கோட்பாடு உறுதிப்படுத்தப்படுகின்றது. காரணம் கருவில் காணப்படும் மரபு (கூர்ப்பு) அணுவை சிறுமாறுதல் செய்வதனூடக அல்லது குறிப்பிட்ட உறுப்பின் அல்லது உறுப்புக்களின் வளர்ச்சிக்கு காரணமாயின் மரபு (கூர்ப்பு) அணுவை செயற்படாமல் செய்வதனூடாக, விரும்பிய உறுப்பை வளர்ச்சி கொள்ள வைக்காமல் தடுக்க முடியும் என்பதாகும். அதாவது தலையில்லாத உயிரினத்தையே உருவாக்கி மாற்று உறுப்பு சத்திர சிகிச்சைக்கு பயன்படுத்தலாம் என்று கண்டறிந்திருக்கின்றார்கள்.

பல காலத்துக்கு முன்பே விழுமியங்களின் அடிப்படையில் பரிமாண கூர்ப்புக் கொள்கை முன் வைக்கப்பட்டிக்கின்ற போதும், இன்றைய விஞ்ஞானத் தகவல்களே அக்கொள்கைகளை ஊர்ஜிதம் செய்கின்றன. இதனடிப்படையில் உயிரினத் தோற்றத்திற்கு பொதுவான அடிப்படை கலமாகும் (Sells) இவை தேவைகளினூடே இரசாயன மாற்றங்களின் விளைவாக பல நிலை உயிரினங்களை தோற்றுவித்து ஒவ்வொரு வளர்ச்சிக் கட்ட விழுமிய உயிரினங்கள் அந்தந்த உயிரினங்களுக்குரிய மரபு அணுக்களைக் கொண்டிருக்கும் என்பதாகும்.

எனவே மரபு அணுக்கள் எனப்படும் போது தீர்மானம் செய்யப்பட்ட (Programmed) கணணியின் செயற்பாட்டை ஒத்த நிகழ்வாக வளர்ச்சி காண்கின்றது அதுமட்டுமல்லாமல் பாரம்பரிய கூர்பியல் வழியையே உயிரின வளர்ச்சி கட்டங்களை பிரதி பலிக்கின்றது உ-ம் மனிதக்குழந்தை

கருவில் குழந்தையின் மூளைவளர்ச்சியின் முக்கிய கட்ட நகர்வின் பின் மூளையின் இசைவாக்கப் பகுதி (Programm-) உடலின் உள்ளுறுப்புக்களின் சேவைகளுக்கு பங்காற்றுகின்றது. மூளையின் முழுவளர்ச்சியின் பின் குழந்தை வெளித்தேவைகளின் பொருட்டு சிந்திக்க தலைப்படுகின்றது. அதே நேரம் இசைவாக்கப் பகுதியும் செயற்படுகின்றது.

பின் தன் எண்ணங்களை மொழி வடிவில் பெற்று சுயதீர்மானம் எடுக்கும் வரை முன்னேறுகின்றது. ஆனால், பல உயிரினங்கள் தமது வெளித் தேவைச் செயற்பாட்டை கூட பரம்பரை அலகுகளினூடாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களிற்கு தேவையான
மருந்து வகைகள்,
பாடசாலை உபகரணங்கள்,
அழகு சாதனங்கள்

மற்றும் பல்வேறு பொருட்களை,
நியாய விலையில் நீங்கள் பெற்றிட

யாழ் நகரிற்குச் செல்லத் தேவையில்லை
நீங்கள் நாடவேண்டிய இடம்

# அங்கர் பாமசி

அரசடி வீதி, கந்தர்மடம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னம்ஸ் Annams

எமது ஸ்தாபனத்தில் உங்களுக்குத் தேவையான
றேடியோவகைகள், மணிக்கூடு, விளையாட்டுப்பொருட்கள்
அத்துடன் ஓகன், கிற்றார், மலோடிக்கா அதன் உதிரிப்பாகங்கள்
விற்பனையாளர்.

114, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

---

தூண்டியின் ஓராண்டு மலரை வாழ்த்துகிறோம்

## சாறாஸ் நாகரிக மாடம்

பிரதான வீதி, நெல்லியடி

---

சிறந்த ரக தங்க நகைகளை
பெற்றுக்கொள்ள
இன்றே நாடுங்கள்





## Nila Jewellers
## நிலா நகைமாடம்

280/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயசிந்தனை இல்லாமல் செய்து முடிக்கின்றது. உ+ம் சிலந்தி கூடு கட்டுதல், கறையான் புற்றெடுத்தல், குருவி கூடு கட்டல் போன்றவை வார்த்தைகளால் சிந்திக்கப்பட்டோ அல்லது பயிற்றுவிக்கப்பட்டோ நடை பெறுவதில்லை தனித்து விடப்படுகின்ற அந்த உயிரினங்கள் சாதாரண மனிதரால் செய்ய முடியாத அளவுக்கு திறமையாக செய்து முடிக்கின்றது.

எவ்வாறாயினும் இயற்கை மாற்றங்களின் விளைவாகவும், இரசாயனமாற்ற பரிமாணங்களூடாகவும் உயிரினம் கூர்ப்பியல்பு அடையும் போது அதன் மூளையின் செயற்பாடு திறமையானதாக இருந்த போதும், சுய சிந்திக்கும் ஆற்றல் இருந்திருக்கவில்லை. ஆனால் உயிரின தோற்ற பரிமாண செயல்பாடுகள் தொடர்பாக மிகமிக ஆழமாக பின்புலத்தில் நுட்பமாக சிந்திக்கப்பட்டிருக்கின்றது. இதுவே இயற்கை என்னும் இறைவன் ஆகும்.

எனவே இறைவன் பற்றற்றவனாகவும் விதிகளினூடே உயிரினத்தை பரிமாணம் அடைய வைத்தாலும், அவ்வப்போது ஆபூர்வச் செயல்பாடுகளின் தன் உந்து சக்தியையும் செயல் படுத்தியிருக்கின்றான்.

**கோக்கூர் பாலன்**

இதில் முக்கியமானது உயிரினங்கள் கொண்டிருக்கும் சுய பாதுகாப்பு அமைப்பு உ+ம் பாம்பு தன் பிடரியிலே பொய்க்கண்களை கொண்டிருப்பதினூடாக தன் எதிரிகளை வெற்றி கொள்கின்றது. இதேபோல் பிற உயிரினங்களும் அவற்றின் பாதுகாப்புக்கு ஆபூர்வ தன்மைகள் கொண்டபரிமாண விழுமியங்களைக் கொண்டிருக்கின்றன எனவே இவ்வாறான விழுமியங்கள் முற்றிலும் எதிர்பாராமல் இயற்கையால் இடம் பெற்ற பரிமாணம் எனக்கொள்ள கூடிய விஞ்ஞானக் காரணிகளை எம்மால் முன் வைக்க முடியுமா? அல்லது அந்தந்த உயிரினங்களே தமது மூளைகளினூடாக இரசாயன மாற்றம் செய்து பரிமாண அபூர்வ விழுமியங்களை இடம் பெறச் செய்தனவா?

அது மட்டுமல்லாமல் பரிமாணம் எனப்படுவது உயிரினக் கூர்ப்பியல்பு மட்டும் தானா? பிரபஞ்சம், ஞாயிற்றுத்தொகுதிகளின் தோற்றம் உட்பட உயிரினத்தோற்ற வளர்ச்சி, மனித நாகரிகம் என்பன போன்ற எல்லாமே பரிமாணம் என்றும் தீர்மானிக்கப்பட்ட அறிவியல் நுட்பம் மிக்க விதிகளினூடகவே இடம் பெற்றிருக்கின்றது இவைகளின் பரிமாணதோற்ற வளர்ச்சிக்கு விழுமியங்கள் (எச்சங்கள்) ஆதாரங்களாகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியனில் இருந்தே பூமி தோன்றிய தென்பதற்கு ஆதாரமான விழுமியம் இன்னும் பூமியின் மத்திய பகுதி எரி குழம்பு நிலையில் இருக்கின்றமை ஆகும் இவ்வாறு மனித நாகரிகம் பரிமாணம் விழுமியங்களூடாக நடை பெற்றமைக்கு ஆதாரமாக இன்னும் நாகரிகம் அடையாத மனிதவர்க்கம் (வேடுவர்) தொடக்கம் அரசாட்சி நடை பெற்றதற்கு ஆதாரமான விழுமியமாக இன்றும் அரசாட்சிகளும், இராணுவ ஆட்சிகளும், தனிக்கட்சி ஆட்சிகளும், பலகட்சி மக்களாட்சிகளும் திகழ்கின்றன. அது மட்டுமல்லாமல், பாரம்பரிய இலக்கியப் பதிவுகளும் கலாசார தன்மைகளும் விழுமிங்களாக திகழ்கின்றன.

இவை ஒட்டுமொத்தமாக இறைவனால் தீர்மானிக்கப்பட்டு செயல் படுத்தும் பரிமாண விதியாகும் எவ்வாறு உயிரினக் கூர்ப்பியல் பில் இறைவனின் உந்து சக்தி பின் புலமாகவிருந்து ஒவ்வொரு உயிரினங்களின் தற்பாதுகாப்புக்கு உதவியாகியதோ, அதேபோல் மனித நாகரிக பாதையில் அவ்வப்போது அபூர்வ பிறவிகள் தோன்றச் செய்து மனித நாகரிக உந்து சக்தியாகவும், உலக அழிவைத் தடுத்தும் உண்மையை உலகறியச் செய்தும், வந்திருக்கின்றன. இவ்வாறு ஆண்டகன்றவர்களே, ஆண்டவன் எனவும் தெய்வம் எனவும் எம்மால் போற்றப்படுகின்றனர். இதுவே எல்லா மதத்திற்கும் பொதுவானதாகும். இஸ்லாமியர்கள் இக்கோட்பாட்டில் நம்பிக்கை உள்ளவர்களாக இருந்தபோதும் இவ்வாறான அபூர்வ பிறவிகளை இறை தூதுவர்கள் என அழைக்கின்றனர்.

எனவே மேலே கூறப்பட்ட பரிமாண ஒப்புநோக்குகையானது. படைப்பாற்றல் மிக்க இயற்கை சக்தியின் அறிவாற்றலையும், தெய்வீகத் தொடர்புகளையும் புலப்படுத்துகின்றது.



''இரண்டு இலட்சம் கொடுத்து வாங்கினேன். ஒன்றுக்கும் பயன்படவில்லை''

''என்ன வாங்கினாய்?''

''என் வீட்டுக்காரரைத் தான் சொல்லுகிறேன்!''

— சுபா

எழுதுங்கள் ........

சிறுகதைகள், கட்டுரைகள், அறிவியல் துணுக்குகள், நகைச்சுவை விடயங்கள் போன்றவற்றை எழுதி அனுப்புங்கள். அவை 150 சொற்களுக்கு உட்பட்டதாயின் வரவேற்கத்தக்கது. தகுதி ஆனவை ''தூண்டி'' இதழில் பிரசுரிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள் குடியேற்றம்

கமலா, கேள்விப்பட்டனியே?
கங்கா கனடா போய்ச்சேர்ந்தாள்
விமலா — துரைசிங் கத்தின்மகள் —
வெளிநாட்டுக்குப் போறாளாம்.

மோகன் நோர்வே, கடைக்கார
முத்துக் குமாரின் மகள் டென்மார்க்
நாக முத்தர் பேரன் போய்
நாலு மாதம் ஆகிறது.

ஜேர்மனிக்குள் நுழைஞ் சிட்டால்
சிலன் எல்லாம் செய்வானாம்
ஊர்மனைக்குள் — உன்னானை —
ஒருத்தர் கூட மிச்சமில்லை.

மூட்டை முடிச்சுக் கட்டுதற்கு
முயல்வார் பல்லாயிரம் பேராம்
நாட்டை விட்டுப் போவோர் க்யூ
நாளும் நீண்டு செல்கிறது.

என்ன இனமோ இதுகளெல்லாம்
என்ன சனமோ தெரியவில்லை
பெண்ணும் ஆணும் ஓடுதுகள்
பிறந்த குழந்தை ஓடுகுது.

அருமைத் துரை, தான் போனதற்கு
ஆனசெலவை அனுப்பிவிட்டான்
தருமன் மூத்த மகனுக்கு
தாலி கூறை அனுப்பிவிட்டான்.

இனியும் இஞ்சை இருக்கிறவை
இளிச்ச வாயர் எல்லோடி
தினமும் செத்த விடென்றால்
தினமும் அழுவார் எத்தனை பேர்?

மூன்று நாலு நூற்றாண்டின்
முன்னர் வெள்ளைக் காரர்கள்
ஈண்டு வந்து குடியேறி
எம்மை ஆள லானார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழம் வந்தார், பர்மாவை
இந்தியாவைப் பிடித்தாண்டார்,
சூழ உள்ள நாடுகளைச்
சூறையாடிக் கொண்டார்கள்.

அடிமை வாழ்க்கை போயிற்றாம்
ஆண்டவர்கள் போய்விட்டார்
மிடியும் பசியும் போனதென்று
வீர முரசம் அறைந்தார்கள்.

ஆண்டோர் போன திசைநோக்கி
ஆளப் பட்டோர் வாரிசுகள்
கூண்டோ(டு) ஓடிப் போகின்றார்
குளிரில் விறைத்துச் சாகின்றார்.

வாழ வழியைத் தேடுகின்ற
மக்களாலே மேற்குலகை
மீளக் குடியேற் றம்செய்யும்
வியப்புச் சரிதை நடக்கிறது.

வெள்ளைக் காரர் நாடெல்லாம்
வீரத் தமிழர் போகின்றார்
கொள்ளை போன செல்வமெல்லாம்
வட்டியோடு கொணர்கின்றார்.

கவிஞர் **சோ. பத்மநாதன்**

---

❋ மனிதனே! நீ பொறுத்திருந்தால் எதையும் சாதிக்கலாம். தண்ணீரைக் கூட அரித்தட்டால் அள்ளலாம். அது பனிக்கட்டியாகும் வரை பொறுத்திருந்தால்.........

—கவிஞர் வைரமுத்து

---

❋ உன்னுடைய பாதையில் நீ வெற்றி பெற வேண்டுமாயின்; உனக்கு எதிரி ஒருவன் வேண்டும். அவ்வாறு எதிரி ஒருவன் இல்லை என்றாலும் ஏற்படுத்திக் கொள்.

—மா. சே. துங்

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் வீட்டில் விஷேடமா!
அவற்றை வண்ணப் படங்களாக
எடுத்துவைக்க விருப்பமா?
வீடியோ எடுத்திட விருப்பமா?
அவற்றிற்கு நீங்கள் செல்லவேண்டிய
ஒரே ஒரு இடம்

# அரவிந் ஸ்பெக்ரம்

326, ஆனைப்பந்தி சந்தி, யாழ்ப்பாணம

## வண்ணத் துணிகளின்
## சாம்ராட்சியம்

# லைடன் புடவை
# நிலையம்

*LEYDEN TEXTILE CENRE*

**Dealers in Textiles, Readymade Garments**

கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Kasthurar Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் மற்றும் முகூர்த்த பட்டுப் புடைவைகள்
சேட்டிங் — சூட்டிங் என்பவற்றை
உங்கள் எண்ணம்போல
எண்ணற்ற ரகங்களில்
தெரிவு செய்திட

# இளவரசி
## ரெக்ஸ்ரைல்

57. நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

வண்ணத் துணியனைத்தும் வளமார்
வகையனைத்தும் எண்ணம் போல்
தேர்ந்தெடுக்க ஏற்ற தோர்
எழிற் கூடம்

# SIVA KANESAN STORES

41, Grand Bazaar, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியப் பார்வை

பார்ப்பவர் **உச்சிக்கிழான்**

அந்தியின் மயக்கத்திலே
இரவுக்கணவன்
கட்டியணைக்கத் துடித்து வந்தான்
ஊடல் கொண்டு பகல் மனையாள்
விட்டுவிட்டு விலகிச் சென்றாள்.
அதைக் கண்டு வானக்கள்ளன்
நாணத்தில் சிவந்து விட்டான்.
இயற்கையில் மட்டுமல்ல
அந்த இல்லத்திலும்
இது தான் காட்சி!
மஞ்சமதில் கிடந்த வஞ்சி
எழுந்து துள்ளி
மிஞ்சியோசை கலகலக்க ஓடிச்செல்ல......
வெண்பாவில் கனிச்சீராய்
விலகிச் செல்லும்
பெண்பாவை முந்தானை
பிடித்திழுந்தான்;
பண்பட்ட தமிழினத்தில் பூத்த
வெண்பட்டுப் பூவின் சொந்தக்காரன்.
''பொறுங்களேன் கொஞ்ச நேரம்
பொங்கிய உணவைக் கூட
அருந்தவே இல்லை நாங்கள்!''
என்றவள் விலகிச் செல்ல......
''பிரம்மனின் சமையல் என்னை
பித்தனாய் ஆக்கும் போது
பேந்தென்ன விருந்து வேண்டும்''
விடுவதாய் அவனும் இல்லை......
விரல்களும் நரம்பைத்தேடி
இடைகளில் மீட்டும் போது
தலைவியின் இதயப்பாறை
அலைகளால் சலசலக்கும்!
''நோகுது'' என்று நொந்தாள்
''தேனினை உண்ணும் வண்டு
மலரிதழ் காயம் பட்டால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னிப்புக் கேட்பதுண்டோ......''?
கேலியாய் சிரித்து நின்றான்.
''தோழிகள் நாளை கண்டால்
கேலிதான் செய்வார் என்னை
காலையில் மஞ்சம் வந்தோம்
நாளைக்கும் மிச்சம் வைப்போம்''
''உணர்வுகளை உள்ளே வைத்த
மன்மதத் தீப்பெட்டியே!
குச்சிகளை உரசிவிட்டு
குளிரென்று போர்ப்பதென்ன ... ?
கற்கண்டு மொழியைத் தேனில்
கலந்தவள் காதில் விட்டான்.
கூந்தலில் விரல்கள் கோதி
வதனப் பூ நுகர்ந்து பார்த்தான்.
வஞ்சியின் விரல்களிட்கும்
மென்மையாய்ச் சொடுக்கெடுத்தான்.
மௌனத்தின் ஆதிக்கத்தில்
சப்தங்கள் இடம் பெயர......
சிவபூஷைக் கரடியாக
மூலையில் இருந்த கூண்டு
கிளியொன்று தலைவி பேரை
மென்மையாய் அழைத்து நிற்கும்.
''கிளியினை இங்கிருந்து
வேறிடம் மாற்ற வேண்டும்''
தலைவியும் கிசுகிசுத்தாள்
''கிளியது பேடை தானே
பழியென்ன அருகிருந்தால்......?
கன்னியாய் வெந்நீரூற்றாய்
கணம்மாறிக் கொதிக்கும் தேகம்
அன்னமே சப்தத் தூண்டில்
மீனுக்கு வேண்டாம்'' என்றே
கிறக்கமாய் மொழி பகர்ந்தான்.
காலதேவன் கடிகார முட்கள்
கடுகதியாகிச் செல்ல......
கருமையும் மெல்ல மெல்ல ...
வழிந்தோடி வற்றி விட;
காலையும் விடிந்தே நன்றாய்
பூக்களாய் சிரித்து நிற்கும்.

★ ★ ★ ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையின் கடன் முடித்து;
நீராடிக் கூந்தல் துவட்டி;
புத்தம் புதுச்சேலை உடுத்து;
பஞ்சணையின் பக்கங்களை
பக்குவமாய்ச் சரி செய்த
வஞ்சியின் காதில் வந்து
''போ... தும்... விடு... ங்க... ளத்தான்''
''நோகுது என்...ன...நீங் கள்''
முணகலும், முக்கலும், மொய்த்தபோது.....
திகைப்பொடும் வெட்கத்தோடும்
எறிகணை விழியிரண்டின்
இமைகளும் படபடக்க...
திடுதிடு வென்று ஓடி
கூண்டினைத் திறந்தே கிளியின்
இதழ்களைப் பொத்தி நின்றாள்!

★ ★ ★ ★

மெத்தையில் பூத்த
மொழிகளைக் கத்திய
தத்தையின் புத்தியை
கற்றதமிழ் வித்தகன்
''கலிங்கத்துப் பரணி''யில்
கவிதையாய் ஆக்குகின்றான்.

நேயக் கலவி மயக்கத்தே
நிகழ்ந்த மொழியை கிளியுரைப்ப
வாயைப் புதைக்கும் மட நல்லீர்
மணிப்பொற்கபாடம் திறமினோ!

(கலி. பரணி. கடைதிறப்புப் படலம்)

## காண்டீபத்தின் சிறப்பு

காண்டீபம் என்றால் அருச்சுனனின் வில். காண்டீபம் அதர்மத்தை ஒழித்து தர்மத்தை நிலை நாட்டும். அதாவது தீயவர்களை எல்லாம் அழித்து தர்மத்தின் பின் நிற்பவர்களை வாழவிடும் வில். இதனாலேயே பாரதப்போரில் துரியோதனன் பக்கத்தினரை அழித்து விட்டு தர்மத்தின் பின்நின்ற பாண்டவர்களை வெற்றி பெற வைத்த வில். இவ்வாறே இந்நூல் தீயவற்றை விலக்கி நல்லனவற்றை அடக்கிய நூல். காண்டீபம் பலராலும் போற்றப்பட்டது போல் இந்நூலும் பலராலும் போற்றப் படவேண்டும்.

S. K. கார்த்திபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை...... சிறுகதை...... சிறுகதை...... சிறுகதை ..... சிறுகதை...

# பித்து மனங்கள்

-இரா. இராஜேஸ்கண்ணன்

மார்கழி மாதத்து நிஷப்த அதிகாலையின் கூதல் முழுவதை யும் வரட்டி எடுத்தது அந்தக் குட்டை நாயின் ஊளை ஒலி. காற்றில் மிதந்து வந்த அந்த வெறுமை ஒலியின் ஓலம் என் இதயத்தினுள் இனம் புரியாத ஒரு கனதியை இறக்கி விட்டுச் சென்றது. நேரம் அதிகாலை நான்கு மணியிருக்கும். ஏதோ ஒரு பெரிய இழப்பிற்கு அச்சார மாகவே அமைந்து விடப் போகும் ஒலியோ அது? அந்த அவல ஒலியைக் கேட்டுவிட்டு காற்றுக் கூட காதைப் பொத்திக் கொண்டது. அதன் பின் கண் கள் மூட மறுத்தன. கணங்கள் யுகங்களாக ஊர்ந்தன.

கனகலிங்கம் ஓவசியர் வீட் டில் ஒரே சனக்கூட்டம். ஆண் களும், பெண்களுமாக முண்டி யடித்துக் கொண்டு உள்ளே போகிறார்கள். வாசலிலே கரு கிப் போன பொன்னொச்சி மரம். மார்கழி மாதத்திலும் துளிர்விடாத பெரிய பலாமரம். ஆளளவில் வளர்ந்து நிற்கும் மழைப்புற்கள். அதன் நடுவே வாயில் வரை வகிர்ந்து விட்ட ஒற்றையடிப்பாதை. நிலைக ளும், கதவுகளும், கூரை ஓடு களும் ஏன், சுவர்கற்களும் கூட இடித்தெடுக்கப்பட்ட அரை குறை நிர்வாண வீடு. அந்த வீட்டைக் காணும் போதெல் லாம் 'குடிசைகள் எரிந்து விட் டன இனி தெளிவாகத் தெரி யும் வானம்' என்ற யப்பானிய கைக்கூ என் இதயத்தில் கரைந்து விடுவதை உணர்கி றேன்.

''ஓவசியர் மாமி செத்துப் போச்சுதாம்'' என்னைக் கடந்து சென்ற ஒரு சிறுவன் சொல்லிக்கொண்டே ஓடினான்.

ஓரிரவில் நாமெல்லாம் பெயர்ந்து சென்ற வேளையில்;

''மாமி எங்களோடை வாவனெனை கூட்டிக்கொண்டு போறம். இங்கை இருந்து வெடிச் சத்தத்துக்கே செத்துப் போவாய்......''

என்று நான் கேட்டபோது,

''இந்த வீடு வாசல் சாமான் சட்டை விட்டிட்டு கடைசி வரையும் நான் வர மாட்டன். இதெல்லாம் கள்ளர் கொண்டு போக என்ரை பொடி பெட்டை வந்து என்னத்தை பாக்கிறது. அதுகள் பாவம் இரத்தத்தை புளிஞ்சு சேத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொத்துகளெல்லே, நீங்கள் போங்கோ நான் செத்தாலும் என்ரை பிள்ளையளின்ரை வீட்டிலையே செத்துப் போறன்''

என்று உறுதியாக சொல்லி விட்ட 'ஓவசியர் மாமி' இரண்டு வருடங்களின் பின்னே இன்று தன் பிள்ளைகளின் வெறும் வீட்டிலே இறந்து விட்டாள்.

வேகமாகச் சைக்கிளை உழக்கிச் சென்று நானும் சனக் கூட்டத்தினுள் சங்கமிக்கின்றேன்.

செய்தி கேள்விப்பட்டு ஓவசியர் மாமியின் கணவன் கனகலிங்கம் ஓவசியரின் சகோதரர்களின் பிள்ளைகள் வந்திருந்தனர். ஓவசியரின் முதலாண்டுத் திவசத்திற்குப் பின்னர் இன்று தான் அவர்களை ஓவசியர் வீட்டில் நான் காண்கின்றேன்.

அந்த உறவுகள் ஆங்காங்கே நின்று ஏதேதோ குசுகுசுக்கின்றன. பார்த்துக் கொண்டிருந்த அயல் தம்முள் பேசிக் கொண்டது.

''என்னவாம் செத்த வீட்டை ஆர் பாக்கப்போகினமாம்''
ஒருத்தி தக்கு வைத்துக் கேட்டாள்.

''பெறாமக்களே வந்து நிண்டு ஆளையாளைப் பாக்கினம்.''
இன்னொருத்தி புட்டு வைத்தாள்.

''இந்த வீடு கிடக்கிற கேவலத்திலை இஞ்சை வச்சு என்னெண்டு செத்தவீடு கொண்டாடுகிறது?''
பெறாமக்களில் ஒருவர் அயலவர் ஒருவரிடம் பதிலை எதிர்பாராது கேள்வி கேட்கிறார்.

''பொடியளுக்கு செத்த வீட்டை வீடியோ பண்ணியாவது அனுப்பி வைக்க வேணும். தாயின்ரை செத்த வீட்டை பாக்காவிட்டால் அதுகளின்ரை மனம் என்ன பாடுபடும்''

தமக்குள் குசுகுசுத்து எடுத்த முடிவுகளை அயலவர்கள் அறியும் வண்ணம் பெறாமக்கள் சூசகமாக பறைசாற்றிக் கொண்டார்கள்.

உயிரடங்கிவிட்ட 'ஓவசியர் மாமி' எப்படி எல்லாம் கஷ்டப்பட்டு வாழ்ந்திருந்தாள். தனது மூன்று பிள்ளைகளையும் ஆளாக்கி எடுப்பதற்கு அவள் பட்டபாடுகள் வார்த்தைகளில் வசப்படாதவை.

கனகலிங்கம் ஓவசியருக்கென்ன வாழ்ந்த போதுங் கவலையில்லை மடிந்த பின்பும் கவலையில்லை. அனுராதபுரத்திலே வேலை பார்த்த அவர் இறுதியாக நடந்த கலவரத்தின் பின் யாழ்ப்பாணம் வரவேயில்லை.

இன்னும் வராத படியால், நிச்சயமாக அவர் கலவரத்திற்கு இரையாகி இருக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவசியர் இறந்த பின் இரண்டு மூன்று வருடங்களின் பின்னேதான் அவனை இவனைப் பல்லிழித்து ஒருவாறு சொற்பதொகைப் 'பென்ஷன்' ஒன்றை பெற முடிந்தது மாமிக்கு.

கணவன் இறந்த பின்னர் இரண்டு ஆண் பிள்ளைகளையும், ஒரே ஒரு பெண் பிள்ளையையும் படிக்க வைத்து, கல்யாணம் முடித்துக் கொடுத்து வாழ வைத்த வரலாற்றை கேட்டால் ஆட்லறி கூட அழுதே வெடிக்கும்.

முற்றத்து ஒற்றைக் கறுத்தக் கொழும்பான் மரத்துப் பழங்களை சந்தையில் நாள் முழுவதும் காத்திருந்து விற்ற நாள்கள் பின்வளவு முருங்கைக் காய்களை தெருவில் சந்தை கூட்டி விற்றகாலம், வீட்டிலே தோசைசுட்டு வீடு வீடாய் கொண்டலைந்து விற்ற நாள்கள், காதில் போட்ட தோட்டை விற்று பிள்ளைகளுக்கு பாடசாலை 'யூனிபோம்' தைத்த நாள்கள் இவை தான் அந்த மூன்று பிள்ளைகளுக்கும் இங்கிலாந்திற்கும் சுவிற்சலாந்திற்கும் விமானப் பாதைகளைச் சமைத்துக் கொடுத்தன, என்பதை யார் சொல்வார்? சொன்னாலும் கேட்பதற்கு அவள் செவிகளில் ஆன்ம அணுக்கள் எவையுமே இப்போதில்லை.

எவ்வாறு 'ஓவசியர் மாமியின்' அடுப்படியில் இருந்து நெய்த்தோசை சாப்பிட்ட ஞாபகங்கள் பசுமையாய் உள்ளதோ அவ்வாறே அவள் பட்ட கஷ்டங்கள் கூட இன்றும் என் மனதில் நிணமும் சதையுமாகப் பதிந்துள்ளன.

''சரி சரி கார் வந்திட்டுது பொடி'யை தூக்குங்கோ'' மாமியின் உறவினர்கள் 'பொடி'க்கு உறவினர்களாகி அமளிப்பட்டனர்.

''ஓவசியர் மாமியின்'' முகத்தோடு நிலைத்து நனவிடைத் தோய்ந்த என் கண்கள் அத்தோடு மீண்டது.

இறுதி வேளையில் மாமியின் 'பொடி'யை தூக்குவதற்கு ஒரு கை கொடுக்கப் போன என் கையில் அவளது தலையணைக்கு கீழ் இருந்த ஒரு அந்நிய நாட்டு கடிதம் கிடைத்தது. எனது சராசரி மனித மனம் யாரது கண்ணும் படாமல் அதனை மறைக்கத் தூண்டியது.

'ஓவசியர் மாமியை' அன்று பிற்பகலிலேயே வீடியோ படப்பிடிப்பு மரியாதைகளோடு ஒரு பிடியில் அடங்கினார்கள்.

அது வரை கைக் கெட்டிய அந்தக் கடிதத்தை வாசிக்க கொண்டிருந்த ஆவலை அடக்கிக் கொண்ட நான் அவசர அவசரமாக என் வீடு நோக்கி சைக்கிளை வலிக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லண்டன்
12-03-1995

அன்பின் அம்மா!...... ...

''அம்மா நாங்கள் போன நாள் தொடக்கம் உன்னை இங்கே கூப்பிடுவதற்கு அலுவல்! பார்த்தவாறே உள்ளோம்மா நிச்சயம் சரி வரும். உன்னை கூப்பிடுவோம். அப்பாவின் பென்சனில் அங்கர் வாங்கிக் குடி. உடம்பை கவனி 'சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம்.' வீடு கவனமெணை. மாம்பழத்தை பிலாப்பழத்தை விற்று நல்ல சாப்பாடு வாங்கிச் சாப்பிடெணை. எமது பெரியப்பாவின் பிள்ளைகளுக்கு கடிதம்போட்டுள்ளோம் அவர்கள் உனக்கு வேண்டிய உதவிகளை செய்வார்கள்''... ...

இப்படிக்கு
உனது அன்பு மகன்

மீண்டும் காலையில் கேட்ட அதே அவல ஊளை ஒலி. மீண்டும் என் நெஞ்சில் இனம் புரியாத ஓர் கனத்தின் அழுத்தம்.

''இந்தக் குட்டை நாயின்ரை தொல்லை பெருந் தொல்லை. அடிச்சுக் கொல்ல வேணும்'' ... அயல் வீட்டாரின் கனத்த வார்த்தைகள்.

நான் கனகலிங்கம் ஓவசியர் வீட்டிற்குச் செல்கிறேன். 'ஓவசியர் மாமி' செத்துக் கிடந்த அறையினுள் நுழைகின்றேன். 'ஓவிசியர் மாமி' படுத்திருந்த படுக்கையருகில், புத்துறவுகளின் வருகை கண்டு ஒழிந்த அந்தக் குட்டை நாய் ஈனக் குரலில் ஊளை ஒலியால் ஆழமாக அழுது கொண்டிருந்தது

என் கண்கள் பிறருக்காகப் பனித்த நாட்களில் இதுவும் ஒன்றானது. அவர்களுக்கு எங்கே தெரியும் முற்றத்து ஒற்றைக் கறுத்தக் கொழும்பான் உயிரற்றுப் பட்டமரமானது.




சேகர்:- சே! என் காதல், அம்பிகாபதி அமராவதி போல, லைலா மஜ்னா போல அழியாக் காதலாய் இருக்கும் என்று நினைச் சேனே இப்படியாகிட்டுதே.

ராஜா:- ஏண்டா! உன் காதலி உன்னை விட்டுப்போய்ட்டாளா?

சேகர்:- இல்லடா, நேற்று எனக்கும் அவளுக்கும் நிச்சயதார்த்தம் ஆகிட்டுதேடா?

ந. தயானி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பா அம்மா மகன்

'இனி உம்மிடம் என்ன மிச்சமிருக்கு.....!'' மலங்க மலங்க விழித்தாள் லட்சுமி மிச்சமோ...... நீங்கள் கட்டிய தாலிதான் மஞ்சள் கயிற்றில் தொங்கிக் கிடக்கு! குரல் கம்மியது அவளுக்கு எங்கேதான் அழுதுவிடுவாளோ என்று பயமாக இருந்தது. பிள்ளையள் மூவரும் முற்றத்தில் நின்றதால் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டாள் கொஞ்ச நேரம் தம்பதிகளிடம் மௌனம் நிலவியது. ''என்னப்பா இவன் குமார் இப்பிடி ஒரு மறுமொழியும் இல்லாமல் இருந்தால் நாங்களும் பேசாமல் இருக்கலாமே? ஒரு தந்தி என்றாலும் அடிச்சுப் பாருங்கோவன்!'' ''தந்தி அடிச்சவுடனே காசு அனுப்பப் போகிறானே? அவனுக்குச் சுயபுத்தி இருக்குதானே! எட இருக்கிற காணியை ஈடு வைச்சு தாய் தகப்பன் அனுப்பினவை, மூன்று சகோதரங்கள் வீட்டில் இருக்கினம் என்று ஒரு யோசனை இல்லாவிடில் இனி நான் என்னப்பா செய்கிறது? ''முதலில் ஒழுங்காய் காசு அனுப்பினவன் பிள்ளை ... இருந்தாற்போலை கடிதமும் இல்லை காசும் இல்லை என்றால் ... லட்சுமிக்கு மகனின் மேல் கோபம் இருந்தாலும் பிள்ளை என்ற பாசம் பொங்கி நின்றது. ''என்ன அனுப்பினவன்? லட்சுமி உமக்குத் தெரியாது; நான் ஒவ்வொரு கணக்கும் திகதி வாரியாக எழுதி வைத்திருக்கின்றேன்! முதலில் 2முறை ... ஒருக்கா 120மாக்ஸ் பிறகு 200மாக்ஸ் மாற்றி எவ்வளவு வந்தது .....? யானைப் பசிக்கு சோளமே தீனி?

## து வைத்தீலிங்கம்

குமார் அவர்களுடைய மூத்தமகன், இங்கு ஜீ.சீ.ஈ 'ஓ' லெவல் பரீட்சையும் எழுதி அவனால் ஒரு பாடத்திலும் சித்தியடைய முடியவில்லை. அவனுக்குப் படிப்பே வெறுத்து விட்டது. ''நான் எங்கையாவது வெளிநாட்டுக்குப் போகவேணும் நல்லாய் உழைக்க வேணும்! தாயிடம் நெடுகலும் கூறுவான். நீங்கள் யாரையாவது பிடித்து ஏதாவது ஒரு கொம்பனியிலை சேர்க்கலாமே குமாரை? லட்சுமி அடிக்கடி கணவரை நச்சரிப்பாள். 'உயக்கு உலகம் தெரியாது! இப்ப கொப்பனி என்றாலும் இன்ரவியூ, கட்டுக்காசு என்று அநேகம் தடைகளைத் தாண்டவேணும். ஏதோ முயற்சி செய்து பார்ப்பம்! சதாசிவம் நாயாக அலைந்தார். தனக்குத் தெரிந்தவர்கள் எல்லாரையும்அணுகினார்கடைசியில் ஒரு அச்சு நிறுவனத்தில் ஆறுமாத கால பயிற்சியின் பின் நல்லவேலை கொடுக்கலாம் என்ற உத்தரவாதத்தை நம்பிக் கொண்டு அங்கு குமாரை சேர்த்து விட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அம்மா முன்னூறு ரூபாய் தாருங்கோ! இரண்டு லோங்ஸ் தைக்க வேணும்! ''அம்மா இருநூறு ரூபாய் தாருங்கோ! சேட்டும் பெனியனும் வேண்ட வேணும்! பயிற்சிக்குப் போகத் தொடங்கியவன் தினமும் தாயை பணம் காய்க்கும் மர மென நினைத்து குமார் கேட்கத் தொடங்கிவிட்டான். ''ஒரு வேலைக்குப் போறதென்றால் ஆமான உடுப்புத் தேவை தானே! காசை மாறிக்கொடுப்பம்....!'' மனைவியின் பரிந்துரையில் சதாசிவம் தனது ஆப்த நண்பன் ஒருவரிடம் ஐந்நூறு ரூபாய் கடனாய் வேண்டிக் கொடுத்தார். ''உதென்ன உடுப்படா குமார்? இவ்வளவு பணம் செலவழித்து உடுப்பு தைச்சனி ஒரு ஆமான தாய் தைக்கக் கூடாதே! சதாசிவத்துக்கு குமார் புதிதாகத் தைத்து வந்த லோங்சும் சேட்டும் பிடிக்கவில்லை உங்களுக்கு விளங்காதப்பா! இது தான் இந்தக் காலத்துப் பாஷன் கண்டறியாத பாஷன்! அவரால் முணுமுணுக்கத்தான் தெரிந்தது. ''விடுங்கோ! போடப் போகிறது அவன் தானே! லட்சுமி கூறினாள். ''அது சரி அவன் தான் உடுக்கப் போகிறான்! உலகம் தாய் தகப்பனைத்தான் பேசும்! உலகத்தைப் பற்றியோ தாய் தகப்பனின் மனக் கோணங்களையோ கவலைப்படுபவனாககுமார் நடக்கவில்லை. ''என்னாலை நடந்து அச்சுக்கூடத்துக்குப் போகமுடியாது! ஒரு சைக்கில் வேண்டித் தாருங்கோ'' புதிதாக ஒரு கோரிக்கை. ''நீ நடக்க வேண்டாம்! பஸ்சிலை போ!'' ''விடியக்காலை நல்ல உடுப்புகளோடை பஸ்சிலை ஏறிப் பார்த்தால் தான் உங்களுக்குத் தெரியும்! மனுசன் ஏறுவானே!'' கடைசியில் வென்றது அவன் தான் சயிக்கில் வேண்டுவதற்கு கடன் எடுத்தார் கணிசமான பகுதி சம்பளத்தில் கழிந்தது. அவர் இருபத்திஐந்து வருடங்களுக்கு முன்னர் வேண்டிய 'றலி' சயிக்கிலை இப்பொழுதும் கண் இமை போல் காத்து வருகிறார். ''இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை தானே குமார்! என்னுடைய சயிக்கிலை ஒருக்கா வடிவாய் துடைச்சு விடு!'' ''உங்கடை கிழட்டுச் சயிக்கிலுக்கு ஒரு துடையல்! குமார் சயிக்கிலை துடையாமலும் விட்டால் பரவாயில்லை. ஆனால் அவனின் அலட்சியமான பதில் சதாசிவத்தை நோக வைக்கும் ''பேசாமல் உதை வித்துப்போட்டு புதிசாய் ஒரு சயிக்கிலை வேண்டுங்கோ அப்பா!'' குமாரின் 'அறிவுரை' வேறு அவருக்கு எரிச்சலை ஊட்டும். ஒரு நாள் ஞாயிற்றுக் கிழமை கீரிமலைக்கு குளிக்கப் போவதாகச் சொல்லி விட்டு நண்பர்களுடன் சயிக்கிலில் சென்றான் மாலை வெறுங்கையோடை திரும்பி வந்தான். ''எங்கடையா சயிக்கில்? சதாசிவத்தின் கேள்விக்கு பதில்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் தமிழ் இலக்கியத்தின் வரலாறு

1. காலம் 13ம் நூற்றாண்டு இறுதி வரை
2. பெயர்- யாழ்ப்பாண இராச்சியம் தோன்றும் வரையுள்ள காலப்பகுதி.
3. **தகவல்கள்:** அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகிய வற்றில் இடம்பெறும் ஈழத்துப்பூதந்தேவனார், மதுரை ஈழத் துப் பூதந்தேவனார் பாடிய பாடல்களாகும் ஈழத்துப்பூதத் தேவனார் பாடிய (2) பாடல்களும். மதுரை ஈழத்துப் பூதந் தேவனார் பாடிய 5 பாடங்களும் இடம் பெறுகின்றன. ஈழத்து இலக்கிய மரபின் ரிஷிமூலமாக பூதந்தேவனாரைக் கொள்ளலாம்.

**இலக்கியத் தொடர்பு I)** சங்கமருவிய காலப்பகுதியில் ஆட்சி புரிந்த களப்பிரர் காலத்தில் புத்ததத்தர், ஆச்சார்ய தர்மபாலா முதலிய தமிழ்ச்சான்றோர் இலங்கையில் உள்ள மகாவிகாரையில் தங்கி இருந்து பாணி நூல்களைக் கற்றதுடன் தாமும் சிலவற்றைச் சுயமாக எழுதியும் சிலவற்றுக்கு உரை எழுதியும் பணி புரிந்துள் ளார்கள். இதனால் சிங்கள பாரம்பரிய இலக்கியத்தின் கருத்துக்கள் தமிழ் இலக்கியத்தோடு தொடர்புபடுகிறது.

**II)** பல்லவர் காலத்தில் இலங்கைக்கும் தமிழ் நாட்டிற்கும் நெருக் கமான இலக்கியத் தொடர்புகள் திருக்கேதீஸ்வர, திருக்கோணேஸ் வர பாடல்களால் உணரலாம்.

பல்லவ அரசனுக்கும் அநுராதபுர அரச தொடர்புகள் 'லிபி கட்டிடப்பணி இலங்கையிலே செல்வாக்குப் பெற்றது.

**III** சோழர்காலப் பொலநறுவைக் காலக் கல்வெட்டுக்கள் தமிழ் இலக்கிய நல்லுணர்வு பெற்ற நன்னிலையைக் காட்டுவதாக அமை கின்றது.

9ம் நூற்- கல்வெட்டொன்றின் இறுதியில் வெண்பா அமைப்பிலே பாடல் ஒன்று இடம் பெறுகிறது.

**IV)** நிசங்கமல்லன் கல்வெட்டு ஒன்று விருத்தப் பாவினால் பொறிக் கப்பட்டுள்ளது. செய்யுளிலே வேறு சில

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V) கல்வெட்டுக்களும் எழுந்தன என்று அறிய முடிகிறது.

VI) சோழராட்சியின் பின் சிங்கள அரசவையில் தமிழ் முக்கிய இடம் பெற்றது தமிழ். பௌத்தப்பள்ளியில் பயிற்றுவிக்கப் பட்டதென் பதற்கு செல்லகினி சந்தேசம் சான்று பகரும்.

VII) 3ம் பராக்கிரமபாகு காலத்தில் 1310இல் அவனது அரச வையில் அரங்கேற்றப்பட்ட தேனுவரைப் பெருமாள் என அழைக்கப்படும் போசராஜர் என்பார் இயற்றிய சரசோதிட மாலை என்னும் சோதிட நூலே இன்றுள்ள காலத்தால் முந்திய ஈழத் தமிழ் நூலாகும்.

பணி வெண்பா, வசனநடை, விருத்தப்பா மிகவும் வளர்ச்சி அடைந்திருந்த காலப் பகுதியாகும்.

ஆரியச் சக்கரவர்த்தி காலம்

i காலம் 14–16

ii ஆரியச் சக்கரவர்த்திகள் எனப்படுபவர் பாண்டி நாட்டைச் சேர்ந்த பிராமணப் படைத்தலைவர் பரம்பரையினர்

iii மன்னர் பெயர் செகராச சேகரன் பரராச சேகரன்

iv நூல்கள் (1) செகராச சேகரமாலை, செகராச சேகரம் பரராசசேகரம், தட்சண கைலாசபுராணம், கண்ணகிவழக் குரை கோவலனார் கதை, சிலபற்கூறல், இரகுவம்சம், வையா பாடல் கோணேஸ்வர கல்வெட்டுகைலாய மாலை திருக்கரசைப் புராணம் கதிரமலைப் பள்ளு

## ஐ. கமலநாதன்

(ஆசிரியர் யாழ் இந்துக் கல்லூரி)

முக்கிய பண்புகள்

1. சோதிடம் பற்றிக்கூறும் பண்பு
2. வைத்திய நூல்............
3. அரசர்களின் வரலாறு — வரலாறு — வையாபாடல்
4. தலங்கள் பற்றியவரலாறு — சமயம் கதிரை மலைப்பள்ளு
5. இராமாயண சிலப்பதிகாரக் கதைகள்
6. யாழ்ப்பாண வரலாறு.

ooooooooooooooooooooooooooooooo

ஆசிரியர்:- ''இன்று போய் போர்க்கு நாளைவா'' சந்தர்ப்பம் கூறடா?

மாணவன்:- தெரியாது சேர்!

ஆசிரியர்:- உன்னைப் போல் ஒரு முட்டாளை நான் இது வரைக்கும் பார்த்ததில்லை

மாணவன்:- இதுக்குத் தெரியும் சேர். அதிபரால், உங்களுக்கு அதிபரின் காரியாலத்தில் கூறப்பட்டது.

எம். எஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மீகக்குரல்..... ஆத்மீகக்குரல்...... ஆத்மீகக்குரல்..... ஆத்மீகக்குரல்...

ஆணவத்தின் பிறப்பிடமே இப்பிரபஞ்சம். இதில் இருள் - ஒளி நிழல்-நிஜம், இன்பம்-துன்பம், என்கின்ற இரட்டை வேடங்கள் தாங்கி உள்ளன. தோன்றுவது மறைவதும், மறைந்தது தோன்றுவதும் இயற்கையின் நியதி. இந்த இயற்கையிலே தான் நாம் ஒரு அங்கம். சிந்தனை ஞானிகள் தம்மையே கேள்வியாகவும், பதிலாகவும் ஆக்கிக் கொண்டனர். அதன் முடிவாய் ஆன்மா ஒரு தொடர்ந்த பயணத்தை யுகங்களாக நடாத்துகின்றது இதற்கு இடைப்பட்ட காலத்திலேயே உடலில் ஆன்மா தோன்றி மறைகின்றது. ஆனால் பயணம் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

வானத்தில் சூரியன் கிழக்கில் உதித்து மேற்கில் மறைகிறான் காலத்தின் நகர்வுகள் பகலையும், இரவையும் நிர்ணயிக்கின்றன ஆயினும் தோன்றிய இடத்திலேயே சூரியன் மறைய வேண்டும். இல்லை எனில் பயணம் தொடர முடியாது. அவ்வாறே எங்கே ஜீவன் தோன்றுகிறதோ அங்கேயே சங்கமிக்கிறது.

அப்படியானால் ஜீவன் எங்கே தோன்றுகிறது? சூரியனிடமிருந்து ஒளிக்கதிர்கள் எப்படித் தோன்றுகிறதோ அவ்வாறே பிரமத்திடம் இருந்து ஜீவன் தோன்றுகிறது. அவை பல வடிவங்களாக ஒவ்வொரு சரீரங்களிலும் தோன்றுகின்றபோது வடிவங்களுக்கேற்ப பெயர்கள் கொண்டு அழைக்கிறோம் வடிவங்கள் பல வாயினும் ஜீவனின் தன்மை ஒன்றே.

## ஆன்மாவின் பயணம்

ஜீவன் எனப்படுவது தன்னை உணராத நிலையில் தான் எடுத்த சரீரத்தை தான் என்று உணர்வதால் அச்சரீரத்தில் நின்று இயங்கும். ஏகவஸ்துவான பிரமத்தை ஜீவன் என்போம். ஜீவனின் பயணங்கள் தொடர்கின்ற பாதைக்கு சரீரங்களே துணையாகின்றது. சரீரத்தின் நற்பயன்களுக்கேற்ப மீண்டும் எடுக்கப்படும். சரீரத்திற்கு முதல் சரீரமே துணை புரிகிறது. சரீரத்தில் வாழ்ந்து உடலை விட்டு வெளியேறிய ஜீவன் உணர்வு பூர்வமான ஒரு சரீரத்திலேயே வாழ்கிறது. அச்சரீரத்தையே சூட்சும சரீரம் என்பர். அன்னமய கோசத்தினால் ஏற்பட்ட சரீரம் சூலசரீரம், விஞ்ஞான மயகோசத்தினால் ஏற்பட்டது சூக்கும சரீரம் இது சகல உணர்வும் உள்ளது. பிரபஞ்சத்தின் அனைத்தையும் உணரக்கூடியது. உடலை விட்டுப் பிரிந்தவுடன் சூட்சும சரீரத்தில் உள்ள ஜீவன் தன் சரீரத்திற்கு ஏற்படுகின்ற நிகழ்வுகளையும், அனுபவங்களையும் எண்ணி மீண்டும் அதனுள் பிரவேசிப்பதற்கு துடிக்கிறது. ஆனால் சரீரத்தில் பிரவேசிப்பதற்கு பிரமத்தின் துணை தேவையாதலால் நுழைய முடியாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை இலக்கியத்தில் தூண்டியின்
சிந்தனைகள் தூண்களாக விளங்கட்டும்

# அபிராமி
## அச்சகம்

செம்பியன் லேன், கொக்குவில்

உங்கள் அச்சுத்தேவைகளுக்கு
நினைவில் அபிராமி ........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறுப்பு வெள்ளை வர்ணப்

புகைப்படங்களை

நவீன கமராக்கள் மூலம்

படம்பிடித்திட

# நிதுஷா ஸ்ரூடியோ

பிரதான வீதி, நெல்லியடி.

கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தரிக்கிறது. இதனை சாதாரண ஊனக்கண்களால் காணமுடி யாது ஆதலால் எங்கே. போய்விட்டதாக எண்ணுகிறார்கள்

உறவினர்கள் சரீரத்தை அலங்கரித்து மயானத்திற்கு கொண்டு சென்று அக்கினித் தீயிலே ஆகுதி செய்கிறார்கள் பஞ்ச பூதங்களி னால் ஆன சரீரத்தை தனித்தனியே அதனுடன் சேர்கின்றார்கள் இங்கு நிலம், நெருப்பு, ஆகாயம், வளியுடன் சேர்ந்த பின்பு அஸ்தியை நீருடன் சேர்கின்றார்கள்.

சரீரம் எரிந்து முடிந்ததும் அந்த அக்கினி அகோரத்தினால் சலிப்படைந்த ஜீவன் சரீரம் அழிந்ததை எண்ணி தன் உறவினரின் பின்னால் தனது இல்லத்தை வந்தடைகிறது ஐந்தறிவு படைத்த ஜீவன்களால் இதனை உணரமுடிகிறது ஆனால் மொழிகளினால் இதனை வர்ணிக்க முடிவதில்லை. இதனை அவர்களின் அன்புப் பிராணிகளின் கண்ணீர் கதறல்கள் மூலம் அறியமுடிகிறது.

ஆலயங்களில் கருங்கல்லினால் தெய்வங்களை வடித்து அவற் றிற்கு உருவூட்டி வழிபடும் நாம் அதேபோல இந்த ஜீவன்களின் பொருட்டும் கருங்கற்களை வைத்து 11, 16, 31 ஆகிய தினங்கள் வரை அந்த ஜீவனை அமர்த்தி அதன் தர்ம பலன்களை கிடைக்கச் செய்து. மீண்டும் புதிய சரீரம் எடுத்து அதன் பயணத்தை தொட ரச் செய்கிறோம்.

இந்த ஜீவன் புதிய சரீரம் எடுப்பதற்கு அதன் நல்வினைத் தீவினைப் பயன்களை நிர்ணயிப்பதற்கு பிரமத்தின் பிரதி நிதியாக இருதூதுவர் இருப்பதாகவும் ஒருவர் சித்திரபுத்திரர் என்றும். மற்ற வர் எமதர்மராஜா என்றும் இவர்களின் நிர்ணயத்திற் கேற்ப பிரமம் அந்த ஜீவனின் புதிய பிறப்பை ஆக்குகிறது.

புதிய சரீரம் எடுப்பதற்கு 12மாதங்கள் எடுக்கிறது. இந்த 12மாதங்களும் அதற்கு 12நாட்களாக இருக்கின்றது. இந்தப் பயண காலங்களில் தான் 12மாசியங்கள் என்று அந்தணரிற்கு தானம் வழங்கப்படுகிறது. அந்த ஜீவனுக்கு பசி, தாகம் அனைத்துமுண்டு ஆதலால் அதற்கு விரும்பிய உணவுப் பதார்த்தங்களைப் படைத்து. பூஜை செய்கிறார்கள். ஏகவஸ்துவின் பிம்பங்களே இந்த ஜீவன் எனவே ஏகவஸ்து பசியாறுகின்ற போது அந்த ஜீவனும் பசியாற் றப்படுகிறது.

மேலும் அதன் பயணத்தின் போது பயணத்திற்கு தேவை யான பொருட்களை ஆரம்பத்திலேயே வழங்குகின்றோம். எனவே தான் செம்பில் நீரும் களைப்பாறும் பொருட்டு சயணரேகணமும் வெப்பத்தில் இருந்து காக்ககுடையும், குளிரில் இருந்து காக்க உடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும், பதங்களை காக்க பாதரட்சை முதலியனவும் தானமாகக் கொடுத்து அதன் பலனைக் கிடைக்கச் செய்கிறோம்.

ஓராண்டு பூர்த்தியில் ஜீவன் எவ்விடத்தை அடைய வேண்டுமோ அவ்விடத்தை அடைகிறது. அங்கே அந்த ஜீவன் தானாகச் செய்த தர்ம பலன்களையும் அதன் பொருட்டு செய்யப்பட்ட தர்ம பலன்களையும் சேர்த்து அதற்கேற்ற சரீரத்தை பிரமத்தின் கருணையால் பூமியில் மீண்டுமோர் யோனியில் பிறந்து அதன் பயன்களை அனுபவிக்கச் செய்து சுழற்சி பூர்வமாக 84000 கோடி யோனிகளில் தோன்றி மறைகிறது.

## சௌ. சசிக்குமாரசர்மா

எது அறிவிற்கும் ஆராய்ச்சிக்கும் அப்பாற்பட்டு பஞ்ச பூதங்களுக்குள் அடங்காது அவற்றை இயங்கச் செய்கிறதோ அது பிரமம். அந்த அழியாத வஸ்துவில் இருந்து தோற்றப்பட்ட ஜீவனும் அழியாததே இன்றைய யுகத்திலே எங்கோ நிகழுகின்ற நிகழ்வுகளை ஒவ்வோர் வீட்டிலிருந்தும் தொலைக்காட்சி மூலம் நாம் பார்க்கிறோம் ஓரிடத்தில் இயக்கும் கருவி மூலம் பிறிதொரு இடத்தில் பெறுகிறோம். ஆனால் தொலைக் காட்சி இல்லாத இடங்களில் ஆகாயத்தில் இருந்து வரும் கதிர்களை நம் கண்ணூடாக காண்பதில்லை. அந்த கருவிகள் மூலம் மட்டுமே பார்க்கமுடியும். இது போலவே ஜீவனின் பொருட்டு செய்யப்படும் சடங்குகளும் அந்த ஜீவனிடமே சேர்க்கப்படுகிறது. இவற்றை அறிவு பூர்வமான மனிதனால் மட்டுமே உணர முடியும். எனவே வாழும் காலத்திலேயே தர்மம் செய்து வாழ்வோமாக.

S - Sincerity — நேர்மை
H - Honesty — உண்மை பேசும் குணம்
O - Obedience — மரியாதை
L - Leavning — கல்வி அறிவு
C - Capacity — திறமை
O - Ordsrliness — ஒழுக்கம்

ஒரு பாடசாலை மாணவர் மேற்கொண்ட அம்சங்களில் காணப்படல் வேண்டும்.

-சிவராஜா துர்க்காயினி

ஒருவர்:- ஏன் ஸார்? உங்க பையன் ஸ்கூட்லர்ல தானே பள்ளி போறான். அப்ப ஏன் லொறி ட்ரைவர் வந்து கூலி கேட்கிறான்?

மற்றவர்:- பையன் போறது ஸ்கூட்லர்ல தான். ஆனா அவனுடைய பள்ளிப் புத்தகங்கள் எல்லாம் பின்னால லொறில தான் போகும். அது தான்

ந. தயானி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...சிறுகதை..... சிறுகதை .....சிறுகதை சிறுகதை...... சிறுகதை .....

# குழப்பங்கள்

யன்னல் வழியே வெறித்துப் பார்த்தபடி நின்றான் அவன். யன்னல் திரை காற்றினால் வேகமாக விசிறப்பட அது அவன் முகத்தில் இறுக்கமாக ஒட்டிக் கொண்டது. கண்களால் ஒன்றையும் பார்க்க முடியவில்லை. ஒன்றும் தெரியவும் இல்லை. அவன் மன நிலையும் அப்படித்தான் இருந்தது.

திரையை கைகளால் வேகமாகக் களைந்த படி ''உனக்கு என்னைப் பிடிக்கவில்லை. தமாஷாகவே எனக்கு சம்மதமளித்தாய் அப்படித்தானே'' என்று அடிக்குரலில் கேட்டான் இராகவன் பதி லேதும் கூறாது அருகிருந்த மேசையை தடவியபடி தலை குனிந்து அழகிய விழிகளை நிலம் நோக்கி தாழ்த்தி நின்றாள் ஸ்வப்பனா.

''உன்னைத் தான் கேட்கிறேன் நீ என்னைக் காதலிப்பதாக கூறியது பொய்யா? நீ எழுதிய கடிதங்கள் பொய்யா? படங்கள் தந்ததும் தமாஷிற்கா? சொல் ஸ்வப்பனா சொல்''

அவள் மௌனியாய் நின்றாள். மௌனம் பல நேரங்களில் ஒரு சிறந்த அஸ்த்திரம். மௌனமாய் இருப்பவர்களை உலகம் ஞானி என்கிறது. அதே மௌனம் சில நேரங்களில் மறுதலையான பலனையும் தருகின்றது. ரௌத்திரம் கொள்ள வைக்கிறது.

ஸ்வப்பனாவின் மௌனம் தான் கூறியதை அவள் ஆமோதிப்பதாக இராகவன் கருதிக் கொண்டான் அவளை ஊடுரு விப் பார்த்தான். புருவத்துள் மஞ்சளாய் சுடர் அலைந்தது. தவித் தது.

''ஸ்வப்பனா! உனக்காக நான் எவ்வளவு செய்திருக்கிறேன். இடம் பெயர்வின் போதும் அதன் பின்பு அங்கே தங்கியிருந்த போதும் எவ்வளவு உதவினேன். கேட்டதெல்லாம் செய்தேன் என்ன செய்யவில்லை. பின்பும் ஏன் என்னை மறுக்கிறாய்? ஒதுக்கு கிறாய்?''

அவளின் கண்கள் நீர் ஊறும் நிலமாக மாறத் தொடங் கியிருந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஸ்வப்பனா எனக்குத் தெரிய என்னில் உள்ள குற்றம் கோபம் கொள்ளல் தான். எவராக இருந்தாலும் கோபம் வந்தால் வாயில் வந்த படி திட்டுவது என் வழமை ஆனால் யாரும் கெட்டுப்போக மனதாலும் நினைத்ததில்லை''

நீ கணேஷை விரும்புவதாகவும் அதனால் உன்னை தான் மறக்க வேண்டும் எனவும் எழுதியிருந்தாய். மறக்க இதுவென்ன கடலலையா எம்பி எம்பிக் குதித்து வரும் அலை கரை வந்ததும் காணாமல் போகிறது. மனம் அடுத்த அலையை காண அவாவும். அது போல காதலியையும் மறக்கமுடியுமா?

அதுகிடக்க, அப்ப ஏன் எனக்கு முதலில் சம்மதம் தெரிவித்தாய். என்னை திருமணம் செய்வதாக ஏன் பதிலளித்தாய் ஸ்வப்பனா

பெண்ணறிவென்பது பேதமைத்து என்பது சரிதானோ? பெண் என்பவள் மாயப்பிசாசு தானோ? என் வாழ்க்கைச்சிகரம் சிறிது சிறிதாக சாய்ந்து கொண்டிருக்கிறதே.

தடுமாறும் எண்ணங்கள் அவனை அலைக்கழித்தன. முடிவெடுக்கமுடியாமலும் முடிவெடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்திலும் அவன் இருந்தான்.

ஸ்வப்பனாவின் மனதில் கடந்த காலம் நிழல்படமாக தெரிந்தது.

கணேஷ் தன் காதலை இராகவன் மூலமே வெளிப்படுத்தினான். இராகவனும் கணேஷை நீ திருமணம் செய்யலாம் அவன் நல்லவன் என்று சிபாரிசும் செய்தான்.

அவள் இராகவன் வீட்டில் இருந்து வெளிக்கிடும் போது இராகவன்.

''ஸ்வப்பனா உன்னை இன்னொருவனும் லவ் பண்றான். நீ கணேஷ் பற்றி எடுக்கிற முடிவை வைத்து அதைப் பற்றி கூறுகிறேன்'' என்றான்.

பின்னர் அவன் கணேஷில் தனக்கு விருப்பமில்லை என்று கூறிய பின்பே தானே அவனை லவ் பண்ணுபவன் என்று கூறினாள். அவளும் சம்மதித்தாள். ஆனால் இன்று மறுக்கிறாள்.

இராகவன் நிதானித்தான் அலைந்த மஞ்சள் அடர் நிலைத்து நீலமாகியது.

''ஸ்வப்பனா, உன்னை நான் வற்புறுத்தவில்லை. இனி உன் விருப்பம். வற்புறுத்தி ஒருத்தியை அடைவது நல்ல வாழ்க்கைக்கு சரிப்பட்டுவராது. நீ உன் விருப்பப் படி நல்லா வாழ்ந்தா அதுவே சரி. எனக்கும் சந்தோஷம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்ண வண்ண டிசைன்களில்
அழகிற்கு அழகூட்டும் ஆடைகளை பெற
நாடவேண்டிய ஸ்தாபனம்

# சுகாதி புடவையகம்

பிரதான வீதி, நெல்லியடி.

தரமான மிகச்சிறந்த C. D யில் பதிவு
செய்யப்பட்ட வீடியோ கஸற்றுக்களை
வாடகைக்கு பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# சோலை வீடியோவிஷன்

பிரதான வீதி, நெல்லியடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லோட்டஸ் மிதி வண்டி
டயர், ரியுப்கள்,
C. I. C. பெயின்ட்
விநியோகஸ்தர்கள்

# இ. ச. பேரம்பலம்
# சக நிறுவனம்

பொது வியாபாரிகள், தரகு முகவர்கள்,
மற்றும் மிதிவண்டி உதிரிப்பாகங்கள்,
பிலிம்ரோல், ரேடியோ, வீடியோ கசட்,
பள்ளி பொருட்கள் ஆகியன
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

**E. S. Perampalam & Co.**

**50, 52 & 54, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

☎ 22824

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆனால் நீ ஒன்று செய்யவேண்டும் ஸ்வப்பனா 'என்ன' என்பது போல அவனை நோக்கி விழி உயர்த்தினாள், ஸ்வப்பனா.'

நீ தந்த கடிதங்கள், படங்கள் உன்னைப்பற்றி நான் என் டயரியில் எழுதிய குறிப்புக்கள் இந்தா? லாச்சியில் இருந்து எடுத்துப் போட்டான்.

இவற்றை உந்த நெருப்புப் பெட்டிய எடுத்து பத்த வச்சிட்டுப் போ,,

''இராகவன்'' கிட்டத்தட்ட அலறியே விட்டாள் ஸ்வப்பனா,

எனக்கு கணேஸும் வேண்டாம். என்னத் தனியா விட்டா போதும் விசும்பினாள்

''அது உன் விருப்பம் ஸ்வப்பனா நான் யாரையும் எதற்காககவும் கட்டாயப்படுத்தவில்லை. ஸ்வப்பனா நீ எனக்கு சம்மதம் தெரிவித்தபின் இடம் பெயர்ந்து போய் அந்த ஊரிலுள்ள கோவில்கள் எல்லாம் நாம் போனோம் ஞாபகம் இருக்கிறதா?

உண்மைதான் இராகவனும் ஸ்வப்பனாவும் தென்மராட்சியில் திரியாத கோவில் இல்லை. அந்த வயல்கள் இன்றும் மனதுள் பசுமையாய் காலாற ஜோடியாய் இருவரும் அந்திப் பொழுதில் நடந்த அந்த வயல் வெளிப் பிரதேசம் மனதில் விரிந்து தெரிகிறது.

நீ உன்னைப் பற்றிய அடையாளங்களைஎரித்து அழித்துவிட்டு போகலாம்.

இவை இருந்தால் இவற்றை வைத்து ஸ்வப்பனாவின் இன்ப வாழ்வை நான் அழித்துவிடுவேனோ என்று எண்ணியே அதனை அவன் அழிக்க முற்பட்டது. எங்கே ஸ்வப்பனாவிற்கு தெரியப்போகிறது.

கலங்கிய கண்களுடன் நிமிர்ந்தாள். இனியும் இங்கே நின்றால் இவனின் சொற் போரால் தான் சொன்னதெல்லாம் மனமறிந்த பொய் என்பதை கூறிவிடுவேன் எனப் பயந்த அவள் தீக்குச்சியை உரசினாள் காகிதங்கள் மேல் போட்டாள். அவை எரியத் தொடங்கின

'ஸ்வப்பனா'' பெருமூச்சு விட்டான் இராகவன் உன் இறுதிக். கடிதம் கிடைத்ததில் இருந்து எத்தனை பக்கற் சிகரெட்டுக்களை ஊதித்தள்ளினோ தெரியாது மேசை இலாச்சியை இழுத்தான்.

சாம்பல் அவற்றின் மேல் அவன் பற்றிய சிகரட்டின் அடிக்கட்டைகள்

அவளிற்கு அழுகை வெடித்துவிடும் போல இருந்தது. விரைவாக மாடிப்படிகளில் இறங்கி தன் சைக்கிளை எடுத்துக்கொண்டு வீட்டுக்குப் போனாள்.

யாரிற்கும் தெரியாமல் குப்புறப் படுத்திருந்து அழுதாள். தந்தை மீது கொண்ட பாசமும் அச்சமும் அவள் வாழ்வை எவ்வளவு தூரம் பாதித்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டில் தனித்த இராகவன் அழுதான். ஸ்வப்பனா நீ எரித்த இந்த காகிதங்களுக்குப் போட்டியாக என் மனமும் எரிகிறது. நான் என்ன தவறு செய்தேன் ஸ்வப்பனா என்ன தவறு செய்தேன்?

தலையை சுவரில் முட்டினான். இடுப்பில் கட்டியிருந்த பெல்ட்டால் தன்னைத் தானே தாக்கினான். அழுதுகொண்டே அடித்தான்.

அவனால் ஸ்வப்பனாவை மறக்க முடியவில்லை. அதற்காக என்ன செய்யலாம்? வேறு யாரையாவது லவ் பண்ணனும் யாரை? என்ற கேள்வி மனதில் வந்தது. அப்போதுதான் அவளை சந்தித்தான். அவனின் உறவினர் அவளிற்கு இவன் மீது ஒரு பிரியம் இருந்தது இவனுக்கும் தெரியும். இவனோடு இன்னும் நெருக்கமாக அவள் பழகத் தொடங்கினாள்.

சிந்துஜா அவள் இவன் மேல் கொண்ட விருப்பத்தை நாசூக்காக தெரியப்படுத்தினாள். இவனும் சம்மதித்தான நன்றாக பழகினார்கள்.

இதை ஸ்வப்பனாவிடம் கூறினான் இராவன் 'இனி நீ முன்பு போல வந்து போகலாம்தானே'' எனவும் கூறினான் அவளும் வந்து போனாள் ஓரிருமுறை!

இராகவனும் ஸ்வப்பனாவும் சந்தித்து கிட்டத்தட்ட ஏழு மாதம்.

ஒருநாள் திடீரென வந்தாள் இராகவனிடம் ஸ்வப்பனா. பின் ஒழுங்காக வரத் தொடங்கினாள்.

''நீயேன் கன காலமா வரேல என்னட்ட''

''நீங்கள் சிந்துவின்ர அன்ரி வீட்ட இருந்தீங்கள்...''

அதுதான் வரேலேயோ?

''ஓம்''

''ஏன்? அங்க வந்தா என்ன?''

''உன்னைய சொன்னா கோபிக்கமாட்டீங்களோ''

''இல்ல ஸ்வப்பனா சொல்லு''

''எனக்குரியத கவர்ந்தவளீட்ட நான் என்னெண்டு வாரது''

''என்ன ஸ்வப்பனா சொல்லுறாய்''

''பின்னயென்ன எனக்குரியவர் தானே நீங்கள்''

இராகவன் அதிர்ந்து போனான். அவன் புருவத்துள் சுடர் தேடினான் சுடர் அம்பிடவேயில்லை.

காதலில் தோல்வியுற்றவன் என்று தெரிந்தும் காதல் செய்யும் சிந்துவை மணம்புரிவதா?

காதல் புரிவதாய் கூறி பின் இல்லை யென்றும் இப்போ லவ் பண்றேன் என வந்திருக்கும் ஸ்வப்பனாவை மணம் புரிவதா இராகவன் என்னதான் செய்யப்போகிறான்!

**செல்கன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களை பாதிக்கும் மார்பக புற்று நோய்

ஜெயா

உடல் நோய்கள் பல வகைப்படும். அவை பல்வேறு காரணிகளால் ஏற்படுகின்றன. இந்த வகையில் புற்றுநோய் உடற்கலங்களின் அசாதாரண வளர்ச்சியால் ஏற்படுகின்றது. இவ் அசாதாரண வளர்ச்சியானது சிதைவுற்ற கலங்களாக வளர்ச்சி பரம்பல் ஏற்படுவதாலேயே, உடல் உறுப்புக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தி பழுதடைந்து உயிரிழப்பு ஏற்படும் வரை இந் நோய் பாதிப்பை ஏற்படுத்துகின்றது

பொதுவாக உடல் வளர்ச்சியில் இயற்கையான வடிவமைப்பு இருக்கின்றது. இது அவர்களின் பரம்பரை அலகும் ஒரு காரணமாக அமைகின்றது. இந்த வகையில் பெண்களின் மார்பகங்களும் வேறுபாடு கொண்ட வடிவமைப்புக்களாக திகழ்கின்றன. எனவே குறிப்பிட்ட வயதின் பின் வளர்ச்சி காணும் பெண்களின் மார்பகங்கள் கள் இந் நோய்க்கு இலக்காக, அதன் வளர்ச்சிக்கு பாதிப்பேற்படுத்தும் காரணிகள் காரணமாக அமைந்து வருகின்றன. சில பெண்களின் முனைப்பகுதி (முலை) முக்கால் பாக மார்பக வளர்ச்சியின் பின்னரே வெளிவருகின்றது. உதாரணமாக சூரிய ஒளி கிடைக்காத தாவரத்தின் இயல்பு நிலை பாதிப்புற்று வளர்ச்சி அடைவது போல் உடைகளால் ஏற்படும் வளர்சசித் தடைப் பாதிப்பு கலச் சிதைவு அசாதாரண வளர்ச்சிக்கு காரணமாகிவிடுகின்றது.

என்வே உடலில் ஏற்படும் சிறு காயம் தழும்பு கட்டி இவை எல்லாமே புற்றுநோயாகிவிடுவதில்லை. மாறாக அசாதாரண வளர்ச்சிப் பரம்பலை அடைந்தால் மாத்திரமே இவை புற்றுநோயாக பாதிப்பை ஏற்படுத்தும். அது மட்டுமல்லாமல் இவை பரம்பரை முகூர்த்த மரபு அணுவில் பதிவேற்பட்டால் பரம்பரை நோயாக பர்ணமிக்கும் அபாயமும் உண்டு

ஆகவே உடல் வளர்ச்சிக் கட்டங்களை பாதிக்கும் அளவு குறைந்த சிறு உடை மற்றும் மிக இறுக்கமான உள்ளாடைகளை தவிர்த்தல் சாலச் சிறந்ததாகும்.

---

*வாசகரே உம்மிடம் ஒரு வார்த்தை!*

உம் கையில் உள்ள ஆண்டு மலர் பக்கங்கள் வழமையை விட கூடுதலாகவும் கொண்டதோடு முன்மட்டை (கவர்) கொழும்பில் அச்சடிக்கப்பட்டதால் (பிறிண்டிங்) செலவு தலைக்கு மேல் ஆகவே இம்மலரை மட்டும் 20ரூபா கொடுத்து வாங்குங்கள் நன்றி. - ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமர் பதில்கள்

பா. ராம்ஜி திருநெல்வேலி

1) ஓ இராமா! நீங்கள் எப்போது எமக்கு காட்சி தருவீர்கள்?

என் மனதில் திற்பவர் இராமர் எங்கும் நிறைந்த அவரை உங்கள் ஞானத்தால் காணலாம்.

2) இ. மாறன் கோண்டாவில்.

தமிழிலே உயர்ந்த சொல் எது?

அம்மா!

க. ந. கோபன் கொக்குவில்

3) தனியார் கல்வி நிறுவனங்கள் பற்றிய இராமர் கருத்து?

ஆசிரியர் தொழிலின் புனிதத் தன்மையை சீரழிக்கும் நிலைக்கு பல விடயங்களில்காரணமாக அமைகின்றதைத் தவிர ஜனநாயக நாட்டின் சுதந்திரம்.

4) சு. மதி சாவகச்சேரி

தலையில்லாத உயிரினத்தையே உருவாக்கிவிட்டார்களே மூளையில்லாது எவ்வாறு உயிரினம் இயங்கும் தன்மை இருக்கும்?

மூளை பல பிரிவுகளாகவே இயங்குகின்றன இதில் முக்கியமான பிரிவு மூளை, மூளி, முள்ளந்தண்டு இவ்வாறு பாகங்களாக மூளை இயங்குவதால் தலைப்பகுதியில் மட்டும்தான் மூளையின் முழுமையான செயற்பாடு தங்கியிருக்கின்றதெனக் கொள்ளமுடியாது.

5) சிவசங்கர் கொக்குவில்.

உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்றால் என்ன?

எண்ணத்தால், குணத்தால் பெரும் தன்மை மிக்கவர்கள் உயர்ந்தவர்கள் எண்ணத்தால் குணத்தால் குறுகிய மனப்பான்மையும் சுயநலமுடையோர் தாழ்ந்தவர்கள்.

ஆனால் தராதரம் எனப்படுவது பட்டம், பதவி, அந்தஸ்துக்களால் வருவது அதற்காக தராதரமுள்ளவன் எல்லோரும் உயர்ந்தவராகிவிட முடியாது.

6. ம. சுரபி தெல்லிப்பளை

சுதந்திரமென்றால் எப்படி இருக்க வேண்டும்?

எதிர் கட்சியாக இருக்கின்றபோது, ஆளும் கட்சியை எதிர்த்து பேசும் உரிமை ஆட்சியில் இருக்கின்ற போது எதிர்தரப்பை அடக்கி ஆல் அடிமை எமக்கோ சுவர்க்க வாழ்வே சுதந்திரமாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தூண்டி** இரு திங்கள் ஏடு — கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடாத்திய தமிழ் மொழித்திறன்

# போட்டி முடிவுகள்

பேச்சு பிரிவு 1

1) வை. அபர்ணா (கொ.இ.க)
2) ந. ஜிறாணு (யா/தெ.ம.க)
3) க. கார்த்திகா (மா. ம. க)

பிரிவு 2

1) பா. பிரணவன் (தெ. ம. க)
2) லோ. அபிராமி (வே.ம.உ.பா)
3) இ. பிரபு (தெ. யூ. க)

பிரிவு 3

1) நா. சுகந்தி (கொ. இ. க)
2) இ. சர்வேஸ்வரா (யா.இ.க)
3) கு. தர்ஷிகா (கொ. இ. க)

பிரிவு 4

1) தி. அருள்நிதி (கொ. இ. க)
2) த. ஸ்ரீபிருந்தன் (கொ.இ.க)
3) கு.பாலஷண்முகன் (யா.இ.க)

கட்டுரை பிரிவு 1

1) க. தர்ஸனன் (யா. இ. க)
2) சி. காந்தரூபன் (தெ. ம. க)
3) பா. சத்திகா (உஷன் இ.வி)
4) ம. அன்பரசன் (யா. இ. க)

பிரிவு 2

1) இ. தர்ஷா (கொ. இ. க)
2) ஸ்ரீ. ஸ்ரீமகள் (வே. ம. உ.பா)
3) கொ. ஹரிகரன் (யா. இ. க)

பிரிவு 3

1) பா. பாலகோபி (யா. இ. க)
2) சி. ரேணுகா (கோ. கி. க)
3) கு. கமலினி (கோ. கி. க)

பிரிவு 4

1) சி. சுகந்தி (கொ. இ. க)
2) சி ஆனந்தி (சு. ம. க)
3) சி,சிவரூபன் (தெ.ம.க)

பாவோதல் (தனி) பிரிவு 1

1) அ. அமிர்தலேஜன் (கொ. இ. க)
2) க. தேசிகன் (கொ. இ. க)
3) கு. சுபாதினி (கொண்மன்ற ம. வி)

பிரிவு 2

1) இ. பிரபு (தெ. யூ. க)
2) சி. கஜவதனன் (யா. ம. க)
3) அ. தர்மிலா (உஷன் இ. வி)

பிரிவு 3

1) ற. தாரணி (வே. ம. உ. பா)
2) ற. கஜானன் (யா. இ. க)
3) வெ.வாகீஸ்வரன் (தெ.யூ.க)

பிரிவு 4

1) சா. கங்கா (யா. இ. ம. க)
2) இ. மைத்திரி(யா. வே. ம. க)
3) கே. தர்ஷினி (யா. தெ. ம.க)

பாவோதல் (குழு) பிரிவு 1

1) யா/தெ. மகாஜனாக் கல்லூரி)
2) யா/மா. மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை)
3) உஷன் இராமநாதன் வித்தியாலயம்

பிரிவு 2

1) கொக்குவில் இந்துக் கல்லூரி
2) மா / மெமோறியல் ஆ. பா
3) மா/ மகளிர் கல்லூரி
4) யா/தெ. மகாஜனாக் கல்லூரி

பிரிவு 3

1) மா/ மெமோறியல் ஆ. பா
2) மா/ மகளிர் கல்லூரி
3) புனித சாள்ஸ் வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிவு 4

1) மா/மகளிர் கல்லூரி
2) மா/மெமோறியல் ஆ. பா
3) உஷன் இராமநாதன் ம.வி

விவாதம் பிரிவு 3

1) யாழ். இந்துக் கல்லூரி
2) மா. மெமோறியல் ஆ.பா

பிரிவு 4

1) கொக்குவில் இந்துக் கல்லூரி
2) மா. மெமோறியல் ஆ. பா

கவிதை பிரிவு 3

1) ந. தர்ஷினி (கோ கி.க)
2) சி. சிவஜா (மா.ம.க)
3) பூ. ரஜித்தன் (தெ. ம.க)

பிரிவு 4

1) ப. சாமினி (யா.இ ம.க)
2) அ. ஜெயதீபா (உஷன் இ வி)
3) த தர்மேந்திரா (யா இ.க)

நாடகப் பிரதி பிரிவு 3

1) கு கார்த்திகா (கொ.இ க)
2) சி. கிருஷ்ணரங்கா (மா.ம க)

பிரிவு 4

1) செ. ஸ்ரீகண்ணன் (பெ ம.வி)
2) அ ஜெயதீபா (உஷன் இ.வி.)
3) வ. சசிக்குமார் (உ.இ.க)

சிறுகதை பிரிவு 3

1) ஜறின் சர்மிலா (கொன்மன்ற்)
2) கு. செந்தூரன் (யா. இ க)
3) கி. நீலகி (யா சு ம.க)

பிரிவு 4

1) வை. சாரங்கன் (தெ. ம. க)
2, க சுகிர்தா (கோ கி க)
3) ஜெ. குமரேஸ்வரி (வே ம.உ ...)

வாசிப்பு பிரிவு 1

1) ம லோகபரணி (தெ. ம. க)
2) ம அன்பரசன் (யா இ. க)
3) த தனாசினி (இ. இ. க)

பிரிவு 4

1) த. ஜெதீனா (வே.ம உ பா)
2) யோ சங்கீதா (மெமோறியல் ஆ.பா)
3) இ. தர்ஷா (தெ.ம.க)

விவாதத்திறன் பிரிவு 3

1) இ. சர்வேஸ்வரா (யா.இ.க)

பிரிவு 4

1) கி மீரா (யா/சு.ம க)

---

# சிந்தனைச் சிதறல்

போட்டி இல. 5

1) வண்டுகளை உண்ணும் மலர் எது?
2) இடைனமெட் வெடிமருந்தை கண்டுபிடித்தவர் யார்?
3) உலகின் மிகச்சிறிய பறவை எது?
4) மேல்பகுதி அசையக் கூடியதாக உள்ள மலை எங்கே உள்ளது?
5) சிவனை பரிகசித்துப் பாடிய புலவர் யார்?
6) புத்தனுக்கு ஞானவொளி தந்தது எது?
7) கால காலர் எனப்படுபவர் யார்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஜலட்சுமி ஜுவல்லறி



அழகிய கலைநயம் எழிலுறு தொழில் வளம் தாமிகு தங்க, வைர நகைகளுக்கு ஒரு இடம்

நவநாகரிக நளின டிசைன்கள் புவியோர் புகழும் புதுமைப் பொலிவுடன் தமிழர் பண்பும் தவழ் பண்பாடும் எழிலின் சிகரம் எனும் நகைக்கொரு இடம்.

சொல்லிய ஓடரில் செய்தே நகைகளை துல்லிய மாகவே தொழில் வளம் பெருக நல்விதமாக அந்நாளிலே தருமிடம்.

**- கஜலட்சுமி ஜுவல்லறி -**

470, கே. கே. எஸ் வீதி, கோண்டாவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org